# 2014 பாடத்திட்டம்
# நற்குணமும் குடியியல் கல்வியும்
# தொடக்கநிலை



STUDENT DEVELOPMENT CURRICULUM DIVISION
MINISTRY OF EDUCATION, SINGAPORE

Ministry of Education
SINGAPORE

*"Our education system must… nurture Singapore citizens of good character, so that everyone has the moral resolve to withstand an uncertain future, and a strong sense of responsibility to contribute to the success of Singapore and the well-being of fellow Singaporeans."*

*Mr Heng Swee Keat, Minister for Education*

ISBN: 978-981-07-5477-8

# உள்ளடக்கம்


| இயல் | | பக்கம் |
|---|---|---|
| அறிமுகம் | நற்குணம் மற்றும் குடியியல் கல்வியைப் பற்றிய புரிந்துணர்வு | 1 |
| | முக்கியப் பண்புகள் | 3 |
| | சமூக மனவுணர்வு சார்ந்த திறன்கள் | 5 |
| | குடியியல் சார்ந்த திறன்கள் | 7 |
| | கற்றல் விளைவுகள் | 9 |
| | நற்குணம் மற்றும் குடியியல் கல்வியின் கூறுகளும் பாடக்கலைத்திட்டக் கால அளவும் | 10 |
| | பாடத்திட்டத்தை வடிவமைக்க வழிகாட்டிய கொள்கைகள் | 13 |
| | கற்றல் கற்பித்தலுக்கு வழிகாட்டியாக விளங்கும் கொள்கைகள் | 15 |
| பொருளடக்கம் | நற்குணம் மற்றும் குடியியல் கல்வியில் மூன்று பிரதான யோசனைகள் (Big Ideas) | 16 |
| | முக்கியக் கருத்துகளும் மைய வினாக்களும் (Key Understandings and Key Questions) | 18 |
| | தொடக்கநிலைப் பள்ளிகளுக்கான நற்குணம் மற்றும் குடியியல் கல்விப் பாடத்திட்டத்தின் பாடப்பொருள் | 22 |
| கற்பித்தல் அணுகுமுறைகள் | | 48 |
| மதிப்பீடு | | 52 |
| மேற்கோள் நூல்கள் | | 55 |
| நன்றி தெரிவித்தல் | | 58 |

**நற்குணம் மற்றும் குடியியல் கல்வியைப் பற்றிய புரிந்துணர்வு**

நற்குணம் மற்றும் குடியியல் கல்வி (Character and Citizenship Education), நமது சிங்கப்பூர் கல்வி முறையில் முக்கியப் பங்கு வகிக்கிறது. நற்குணம் மற்றும் குடியியல் கல்வியின் மூலம் மாணவர்கள் தங்கள் குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் பொறுப்புடன் நடந்துகொள்ளக் கற்றுக்கொள்கின்றனர். மேலும், நம் நாட்டை வழிநடத்திச் செல்லும் பொருட்டுத் தங்கள் பொறுப்புகளையும் புரிந்துகொள்கின்றனர். இப்பாடக்கலைத்திட்டத்தை வடிவமைக்கும்போது மாறிவரும் சமூக மற்றும் உலகப் போக்குகளும், தொழில்நுட்ப முன்னேற்றங்களும் கருத்தில் கொள்ளப்பட்டன.


மாணவர்களுக்குப் பண்புகளைப் புகுத்தி, திறன்களை வளர்த்து அவர்களை நல்ல மனிதர்களாகவும் பயனுள்ள குடிமக்களாகவும் உருவாக்குவதே நற்குணம் மற்றும் குடியியல் கல்வியின் குறிக்கோளாகும். 1959-ஆம் ஆண்டிலிருந்து, மாணவர்களுக்குப் பண்புகள், பழக்க வழக்கங்கள், திறன்கள் ஆகியவற்றைக் கற்பிப்பதற்குப் பள்ளிகளில் பல நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் குடியியல் மற்றும் அறநெறிக் கல்வி (1992), தேசியக் கல்வி (1997), சமூக மனவுணர்வு சார்ந்த கற்றல் (2005), புறப்பாட நடவடிக்கைகள் முதலான கற்றல் அனுபவங்களும் அடங்கும்.

நற்குணம் மற்றும் குடியியல் கல்வி நமது கவனத்தைப் பலதரப்பட்ட நடவடிக்கைகளுள்ளும் பொது இலக்கைக் காண உதவுகிறது. நற்குணம் மற்றும் குடியியல் கல்வியின் விரும்பத்தக்க விளைவுகள், முக்கியக் கட்ட விளைவுகளுடனும் (Key Stage Outcomes) கல்வியின் விரும்பத்தக்க விளைவுகளுடனும் (Desired Outcomes of Education) ஒருங்கிணைந்து உள்ளன.

நற்குணம் மற்றும் குடியியல் கல்வி 21-ஆம் நூற்றாண்டுத் திறன்களுக்கான அமைப்புமுறைக்கும் மாணவர் விளைவுகளுக்கும் அடிப்படையாக அமைகின்றது (படம் 1).


## படம் 1 : 21-ஆம் நூற்றாண்டுத் திறன்களும் மாணவர் விளைவுகளுக்கான அமைப்புமுறையும்

இந்த அமைப்புமுறை முக்கியப் பண்புகள், சமூக மனவுணர்வு சார்ந்த திறன்கள், சமூக அறிவு, உலக அறிவு, பிற கலாச்சாரங்களைக் கையாளக்கூடிய திறன்கள் ஆகியவற்றுக்கிடையே உள்ள தொடர்பை வலியுறுத்துகிறது. இவை அனைத்தும் மாணவர்களின் நற்குணத்திற்கும் குடியியல் வளர்ச்சிக்கும் இன்றியமையாதவையாக விளங்குகின்றன.



**முக்கியப் பண்புகள்**

ஒருவர் நற்குணம் உள்ளவராக இருக்கவும் நம் நாட்டிற்குப் பயன்மிக்க குடிமகனாகத் திகழவும் முக்கியப் பண்புகளான மதிப்பு, பொறுப்புணர்வு, மீளும்தன்மை, நேர்மை, பரிவு, நல்லிணக்கம் ஆகியவை அடிப்படையாக அமைகின்றன. இப்பண்புகள், ‘எது சரி? எது தவறு?’ என்று பகுத்தறிந்து பொறுப்பான தெரிவுகளைத் தேர்ந்தெடுக்க மாணவர்களுக்கு உதவுகின்றன. மேலும் சமுதாயத்தில் அவர்கள் கொண்டுள்ள பொறுப்புகளைப் பற்றிய விழிப்புணர்வையும் இப்பண்புகள் வலியுறுத்துகின்றன. இப்பண்புகள் (படம் 2) நமது பொதுப் பண்புகள் (Our Shared Values), சிங்கப்பூர்க் குடும்பப் பண்புகள் (Singapore Family Values), சிங்கப்பூர் 21 இலக்கு (Singapore 21 Vision) மற்றும் தேசியக் கல்வி தரும் செய்திகள் (National Education messages) ஆகியவற்றிலிருந்து உருவானவை.



## படம் 2 : முக்கியப் பண்புகள்

### முக்கியப் பண்புகள்

### மதிப்பு

தன் சுயமதிப்பிலும் மற்றவரிடம் உள்ளார்ந்திருக்கும் மதிப்பிலும் ஒருவர் நம்பிக்கைகொள்ளும்போது அவர் மதிப்பை வெளிக்காட்டுவார்.

### பொறுப்புணர்வு

பொறுப்புணர்வுமிக்க ஒருவர் தான், தன் குடும்பம், சமூகம், தேசம், உலகம் ஆகியவற்றோடு தான் கொண்டுள்ள பொறுப்புகளை அறிந்துகொள்வார். அவர் அவற்றை ஏற்றுக்கொண்டு தமது பொறுப்புகளை விருப்பத்துடனும் கடப்பாட்டுடனும் நிறைவேற்றுவார்.

### நல்லிணக்கம்

நல்லிணக்கத்தை மதிக்கும் ஒருவர் உள்ளார்ந்த இன்பத்தை (inner happiness) நாடுவதோடு சமூக ஒருமைப்பாட்டையும் மேம்படுத்துவார். பல இன கலாச்சாரச் சமுதாயத்தின் ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் உணர்ந்து பாராட்டுவார்.

### நேர்மை

நேர்மையான ஒருவர் நெறிசார்ந்த கொள்கைகளைப் பின்பற்றுவதுடன் ‘சரி’ என்று கருதுவதைத் துணிவுடன் தற்காத்துக் கூறுவார்.

### மீளும்தன்மை

மீளும்தன்மையுடைய ஒருவரிடம் உணர்வுபூர்வமான வலிமை இருப்பதுடன் சவால்களை விடாமுயற்சியுடன் எதிர்கொள்ளும் பண்பும் இருக்கும். அவர் துணிவு, நம்பிக்கை, சூழலுக்கேற்ப மாற்றி அமைத்துக்கொள்ளும் தன்மை, எந்த நிலைமையையும் செயல்திறன்களுடன் கையாளும் தன்மை ஆகிய பண்புகளை உடையவராக இருப்பார்.


### பரிவு

பரிவுமிக்க ஒருவர் கனிவு மற்றும் கருணை உணர்வுடன் செயல்படுவார். சமூகம் மற்றும் உலக நலனுக்காக அவர் தம் பங்கை அளிப்பார்.

## சமூக மனவுணர்வு சார்ந்த திறன்கள்

சமூக மனவுணர்வு சார்ந்த கற்றல் என்பது உணர்வுகளைக் கண்டறிந்து அவற்றைக் கையாளும் திறன்களைக் குறிக்கின்றது. மேலும், அத்திறன்களைப் பெறுவதினால் மாணவர்களால் மற்றவர்கள் மீது பரிவும் அக்கறையும் காட்ட முடிகிறது, பொறுப்பான முடிவுகளை எடுக்க முடிகிறது, நல்ல உறவுகளை நிர்வகிக்க முடிவதோடு சிக்கலான சூழ்நிலைகளையும் சிறந்த முறையில் சமாளிக்க முடிகிறது[1].

சமூக மனவுணர்வு சார்ந்த திறன்கள் (படம் 3) ஒன்றோடு ஒன்று தொடர்புடைய ஐந்து களங்களாக வகுக்கப்பட்டுள்ளன. அவை சுய விழிப்புணர்வு, சுய நிர்வாகம், சமூக விழிப்புணர்வு, உறவுகளை நிர்வகித்தல், பொறுப்புடன் முடிவெடுத்தல் ஆகியவை ஆகும். சுய விழிப்புணர்வு, சுய நிர்வாகம் ஆகிய களங்கள், ஒருவர் தம்மைப் பற்றி நன்கு புரிந்துகொண்டு தமது உணர்வுகளையும் நடத்தையையும் நிர்வகிப்பதைக் குறிக்கின்றன. சமூக விழிப்புணர்வு, உறவுகளை நிர்வகித்தல் ஆகிய களங்கள், ஒருவர் மற்றவரோடு பழகும் முறையைக் குறிக்கின்றன. பொறுப்புடன் முடிவெடுத்தல் களம், ஒருவர் தம் செயல்களைக் கையாளும்போதும் மற்றவர்களோடு பழகும்போதும் சிக்கலான சூழ்நிலைகளைச் சமாளிக்கும்போதும் நெறிசார்ந்த முடிவுகளை எடுப்பதைக் குறிக்கின்றது.




[1] CASEL: Collaborative for Academic, Social and Emotional Learning.



RESTRICTED

**படம் 3: சமூக மனவுணர்வு சார்ந்த திறன்கள்**

## சமூக மனவுணர்வு சார்ந்த திறன்கள்

### சுய விழிப்புணர்வு

தன் உணர்வுகள், வலிமைகள், விருப்பு வெறுப்புகள், பலவீனங்கள் குறித்துத் தெளிவான தன்னறிவுகொண்ட ஒருவர் ஆக்ககரமான சுய மரியாதை, ஆற்றல், சுய கருத்து ஆகியவற்றை வளர்த்துக்கொள்வார்.

### சமூக விழிப்புணர்வு

சமூக விழிப்புணர்வுள்ள ஒருவரால் பல்வேறு கண்ணோட்டங்களிலிருந்து சிந்திக்க முடியும். மேலும், வேறுபட்ட கருத்துகளை அடையாளங்கண்டு அவற்றை ஏற்றுக்கொண்டு மற்றவர்களிடம் பரிவும் மரியாதையும் காட்ட முடியும்.

### சுய நிர்வாகம்

சுய நிர்வாகத் திறன் கொண்டுள்ள ஒருவரால் தன் உணர்வுகளைச் சமாளித்துத் தன் கட்டொழுங்கைச் செயல்படுத்தித் திட்டமிட்டுச் செயல்பட முடியும்.

### உறவுகளை நிர்வகித்தல்

உறவுகளைச் சிறப்பான முறையில் கையாளும் ஒருவரால் நல்ல உறவுகளை ஏற்படுத்தி அவற்றை வளர்க்க முடியும். இவரால் சிறப்பான கருத்துப் பரிமாற்றம் செய்வதோடு சண்டை சச்சரவுகளைத் தீர்த்து மற்றவர்களோடு வேலை செய்யவும் முடியும்.

### பொறுப்புடன் முடிவெடுத்தல்


பொறுப்புடன் முடிவெடுக்கும் திறன் கொண்ட ஒருவரால் தான் எடுக்க விரும்பும் முடிவால் ஏற்படக்கூடிய விளைவுகளை அடையாளங்காணவும் அவற்றைச் சீர்தூக்கிப் பார்த்து அறநெறியை அடிப்படையாகக் கொண்ட முடிவுகளை எடுக்கவும் முடியும்.



RESTRICTED

### குடியியல் சார்ந்த திறன்கள்

குடியியல் கல்விக்குத் தொடர்பான திறன்கள், 21-ஆம் நூற்றாண்டுத் திறன்களுக்கான அமைப்புமுறையில் இடம்பெற்றுள்ள 'சமூக அறிவு', 'உலக அறிவு', 'பிற கலாச்சாரங்களைக் கையாளக்கூடிய திறன்கள்' ஆகியவை மாணவர் விளைவுகளில் வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளன. இத்திறன்கள் மாணவர்களைச் சிங்கப்பூரில் வேரூன்றியிருக்கும் அக்கறையுள்ள குடிமக்களாக விளங்க உதவுகின்றன (படம் 4). மாணவர்களை நற்குணம் கொண்ட குடிமக்களாக உருவாக்க இத்திறன்கள் ஏதுவாக விளங்குகின்றன.






RESTRICTED

**படம் 4: சமூக அறிவு, உலக அறிவு, பிற கலாச்சாரங்களைக் கையாளக்கூடிய திறன்கள் ஆகியவற்றிலுள்ள கூறுகள்**

## சமூக அறிவு, உலக அறிவு, பிற கலாச்சாரங்களைக் கையாளக்கூடிய திறன்கள்

### துடிப்புமிக்க சமூக வாழ்வு

துடிப்புமிக்க சமூக வாழ்வை வாழும் ஒருவர்:

- பொறுப்புள்ள முறையில் சமூகத்தில் நடந்துகொள்வார்
- சமூக நலன்மிக்கவராவார்
- சமூக மற்றும் தேசிய வளர்ச்சிக்கான நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்துப் பங்காற்றுவார்

### தேசிய மற்றும் கலாச்சார அடையாளம்

தேசிய மற்றும் கலாச்சார அடையாளம் கொண்ட ஒருவர்:

- தேசத்தின் மீது பொறுப்புணர்வு கொண்டிருப்பார்
- தேசிய கொள்கைகளின் மீதும் கலாச்சாரத்தின் மீதும் கடப்பாடு கொண்டிருப்பார்

### உலகத்தைப் பற்றிய அறிவு

உலகத்தைப் பற்றிய அறிவு கொண்ட ஒருவர்:

- வெளிநாட்டுப் பண்பாட்டுப் பரிமாற்றத்தினால் ஏற்படும் மாற்றங்களைச் சமாளிப்பார்.
- வளர்ந்து வரும் உலக மாற்றங்களைக் கண்டறிந்து, பகுத்தாராய்ந்து மதிப்பிட்ட பின், அவற்றுக்கும் நம் சமூகங்களுக்குமிடையே உள்ள தொடர்பை அறிந்துகொள்வார்

### சமூக, கலாச்சார கூருணர்வு மற்றும் விழிப்புணர்வு

சமூக, கலாச்சார கூருணர்வு மற்றும் விழிப்புணர்வு கொண்ட ஒருவர்:

- மற்றவர்களை நன்கு புரிந்துகொண்டு அவர்களை மதித்து ஏற்றுக்கொள்வதன் மூலம் அவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்வார்.
- உள்ளூரிலும் வெளியூரிலும் பிற சமூக கலாச்சாரத்தைச் சேர்ந்தவர்களுடன் தகுந்த முறையில் நடந்துகொள்வதால் சமூகப் பிணைப்பை மேம்படுத்துவார்

**கற்றல் விளைவுகள்**

மாணவர்கள் எதைக் கற்கவேண்டும் என்பதையும் இறுதியில் எந்த நிலையை அடைய வேண்டும் என்பதையும் நற்குணம் மற்றும் குடியியல் கல்வியின் கற்றல் விளைவுகள் (படம் 5) குறிப்பிடுகின்றன. இக்கற்றல் விளைவுகளில் முக்கியப் பண்புகளும் அடங்கியுள்ளன. முதல் நான்கு கற்றல் விளைவுகள் (1 - 4) ஒருவரின் குணநலனை உருவாக்கத் தேவைப்படும் அம்சங்களையும் சமூக மனவுணர்வு சார்ந்த திறன்களையும் குறிக்கின்றன. அடுத்த நான்கு கற்றல் விளைவுகள் (5 - 8) 21-ஆம் நூற்றாண்டிற்குத் தேவையான திறன்களுக்கான அமைப்புமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கியக் குடியியல் தொடர்பான கூறுகளின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் ஒருவரின் அடையாளம், கலாச்சாரம், துடிப்புமிக்க மற்றும் பொறுப்புள்ள சமூக உறுப்பினராக விளங்குவதற்குத் தேவைப்படும் குடியியல் கூறுகளை வரிசைப்படுத்தும் வகையில் இந்த நான்கு கற்றல் விளைவுகள் அமைகின்றன.

**படம் 5: நற்குணம் மற்றும் குடியியல் கல்வியின் கற்றல் விளைவுகள்**

| | |
|---|---|
| **1** | சுய விழிப்புணர்வைப் பெற்றுச் சுய நிர்வாகத் திறன்களைப் பயன்படுத்திச் சுய நலனையும் செயல்திறனையும் அடைதல் |
| **2** | நேர்மையுடன் நடந்துகொள்வதோடு அறநெறிக் கொள்கைகளை நிலைநாட்டும் விதத்தில் பொறுப்பான முடிவுகளை எடுத்தல் |
| **3** | சமூக விழிப்புணர்வைப் பெற்று மற்றவருடன் பழகவும் கருத்துப்பரிமாற்றம் செய்யவும் தேவையான திறன்களைப் பயன்படுத்தி நல்ல உறவுமுறைகளை அமைத்துக்கொண்டு அவற்றை நிலைநாட்டுதல் |
| **4** | மீளும்தன்மையுடன் இருந்து சவால்களை வாய்ப்புகளாக மாற்றும் திறமையைப் பெற்றிருத்தல் |
| **5** | நமது தேசிய அடையாளத்தின் மீது பெருமையும் சிங்கப்பூரின் மீது பற்றும் தேசத்தை முன்னேற்றுவதற்குக் கடப்பாடும் கொண்டிருத்தல் |
| **6** | சிங்கப்பூரின் பலதரப்பட்ட சமூகக் கலாச்சாரங்களை மதித்துச், சமூகப் பிணைப்பையும் நல்லிணக்கத்தையும் மேம்படுத்துதல் |
| **7** | மற்றவர்களிடம் பரிவு காட்டுவதோடு நமது சமூகம் மற்றும் தேசத்தின் வளர்ச்சிக்குத் துடிப்பான முறையில் பங்காற்றுதல் |
| **8** | சமூக, தேச, உலக நடப்புகளைப் பற்றி அறிந்த பொறுப்புள்ள குடிமகனாக, அவற்றைப் பற்றி மீள்நோக்கம் செய்து ஏற்புடைய முறையில் நடந்துகொள்ளுதல் |



RESTRICTED

**நற்குணம் மற்றும் குடியியல் கல்வியின் கூறுகளும் பாடக்கலைத்திட்டக் கால அளவும்**

நற்குணமும் குடியியல் கல்வியும் என்ற பாடக்கலைத்திட்டத்தில் பண்புள்ள குடிமக்கள் பாடங்கள், வகுப்பாசிரியர் வழிகாட்டும் பாடவேளை (FTGP), பள்ளி சார்ந்த நற்குணமும் குடியியல் கல்வியும், நற்குணம் மற்றும் குடியியல் கல்வி வழிகாட்டும் தொகுதி ஆகியவை அடங்கியுள்ளன. நற்குணமும் குடியியல் கல்வியும் என்ற பாடத்திட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அறிவு, திறன்கள், பண்புகள், மனப்பான்மைகள் ஆகியவை, பண்புள்ள குடிமக்கள் பாடங்களிலும் வகுப்பாசிரியர் வழிகாட்டும் பாடங்களிலும் பள்ளி சார்ந்த நற்குணம் மற்றும் குடியியல் கல்வியிலும் வெளிப்படையாகக் கற்பிக்கப்படும். பாலியல் கல்வியைக் (Sexuality Education) கற்பிக்கத், தனிப் பாடத்திட்டம் வரையப்பட்டுள்ளது. இத்தனிப் பாடத்திட்டம் தொடக்கநிலை 5 முதல் தொடக்கநிலை 6 வரையுள்ள மாணவர்களின் வளர்ச்சியையும் அவர்களின் தேவைகளையும் அடிப்படையாகக் கொண்டு வரையப்பட்டுள்ளது.

| **நற்குணம் மற்றும் குடியியல் கல்வியின் கூறுகள்** | **விளக்கம்** |
|---|---|
| நற்குணம் மற்றும் குடியியல் கல்வியின் பாடங்கள் | பண்புகள், அறிவு, திறன்கள் ஆகியவற்றை நற்குணம் மற்றும் குடியியல் கல்வியின் வழி தாய்மொழியில் கற்பித்தல் |
| வகுப்பாசிரியர் வழிகாட்டும் பாடவேளை | சமூக மனவுணர்வு சார்ந்த திறன்களைக் கற்பித்தலும் ஆசிரியர் மாணவர் உறவை வளர்த்தலும். இப்பாடங்களில் இணையத்தைப் பொறுப்புடன் பயன்படுத்துதல் அம்சங்களும் கல்வி மற்றும் தொழில் வழிகாட்டி அம்சங்களும் இடம்பெற்றுள்ளன. |
| பள்ளி சார்ந்த நற்குணமும் குடியியல் கல்வியும் | • நற்குணம் மற்றும் குடியியல் கல்வியோடு தொடர்புடைய பள்ளி மாணவர் கூட்டங்கள்<br>• பள்ளிப் பண்புகளை ஒட்டி அமைந்த பாடங்கள் |
| நற்குணம் மற்றும் குடியியல் கல்வி வழிகாட்டும் தொகுதி | • பாலியல் கல்வி |

**பாடக்கலைத்திட்டக் கால அளவு:**

நற்குணம் மற்றும் குடியியல் கல்விப் பாடத்திட்டத்தின் ஒரு வார கால அளவில், பண்புள்ள குடிமக்கள் பாடங்கள் (கீழ்த் தொடக்கநிலைக்கு 1 மணி நேரம், மேல் தொடக்கநிலைக்கு 1½ மணி நேரம்); வகுப்பாசிரியர் வழிகாட்டும் பாடங்கள் (½ மணி நேரம்); பள்ளி மாணவர் கூட்டம் (½ மணி நேரம்) ஆகியவை இடம்பெறும். ஒட்டுமொத்தமாகக் கீழ்த் தொடக்கநிலைக்கும் மேல் தொடக்கநிலைக்கும் கற்பித்தல் நேரம் 60 மணி நேரமும் 75 மணி நேரமும் முறையாக வழங்கப்பட்டுள்ளன. நற்குணம் மற்றும் குடியியல் கல்வியின் கட்டமைப்புகள் படங்கள் 6 முதல் 8 வரை விளக்கப்பட்டுள்ளன.

**நற்குணம் மற்றும் குடியியல் கல்விப் பாடங்கள்:**

தொடக்கநிலையில் பண்புள்ள குடிமக்கள் பாடங்கள் தாய்மொழியில் கற்பிக்கப்படுகின்றன. வங்காளம், பஞ்சாபி, உருது போன்ற இந்திய மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்ட மாணவர்களுக்கும் தாய்மொழி கற்றலிலிருந்து விலக்குப் பெற்ற மாணவர்களுக்கும் பண்புள்ள குடிமக்கள் பாடம் ஆங்கிலத்தில் கற்பிக்கப்படும். இந்த மாணவர்களுக்கான கற்பித்தல் கருவிகள் ஆங்கிலத்தில் உள்ளன.

**வகுப்பாசிரியர் வழிகாட்டும் பாடவேளை:**

இப்பாடத்தில் சமூக மனவுணர்வு சார்ந்த திறன்கள் வெளிப்படையாகக் கற்பிக்கப்படுகின்றன. மேலும் இப்பாடவேளையில் வகுப்பாசிரியர் மாணவர் உறவை வளர்க்கப் பல நடவடிக்கைகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. முறையான இணையப் பயன்பாடு, கல்வி மற்றும் தொழில் பற்றி வழிகாட்டுதல், துன்புறுத்துதலிலிருந்து எப்படிப் பாதுகாத்துக்கொள்வது (தொடக்கநிலை 1 - 4) ஆகிய அம்சங்கள் இப்பாடங்களில் புகுத்தப்பட்டுள்ளன. இப்பாடங்கள் மாணவர்கள் சில முக்கியப் பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கு வழிகாட்டுவதோடு முக்கியப் பண்புகளையும் மனவுணர்வு சார்ந்த திறன்களையும் வலியுறுத்துகின்றன. இவற்றை மாணவர்கள் தேவைப்படும் சூழ்நிலைகளில் பயன்படுத்த முடியும்.

**பள்ளி சார்ந்த நற்குணம் மற்றும் குடியியல் கல்விப் பாடங்கள்:**

பள்ளி சார்ந்த நற்குணம் மற்றும் குடியியல் கல்வியின் பாடங்களை நடத்தப் பள்ளிகளுக்கு நெகிழ்வுத் தன்மை வழங்கப்படும். ஓர் ஆண்டில் இப்பாடத்திற்கு 11 முதல் 15 மணி நேரம் வரை வழங்கப்படும். இப்பள்ளி சார்ந்த பாடம் என்பது பள்ளி பண்புகளை ஒட்டியமைந்த பாடங்களையும் நடவடிக்கைகளையும் பள்ளி மாணவர் கூட்டங்களில் இடம்பெறும் நிகழ்ச்சிகளையும் உள்ளடக்கும்.

**நற்குணம் மற்றும் குடியியல் கல்வி வழிகாட்டும் தொகுதி:**

இவ்வழிகாட்டும் தொகுதியில் பாலியல் கல்வி கட்டாயமாகக் கற்பிக்கப்பட வேண்டும். இது மாணவப் பருவ வளர்ச்சிக்கான திட்டம் (Growing Years Series) எனப்படும் பாடங்களாகக் கற்பிக்கப்படும். பாலியல் கல்வியில் மாணவர்களின் வளர்ச்சிக்கு ஏற்ப குறிப்பிட்ட நோக்கங்களும் கருப்பொருள்களும் உள்ளன. படம் 8-இல் குறிப்பிட்டுள்ளதைப் போல் பள்ளிகள் தொடக்கநிலை 5 முதல் தொடக்கநிலை 6 வரையுள்ள மாணவர்களுக்குப் பாலியல் கல்வியைக் கற்பிக்க ஓர் ஆண்டில் 4 மணி நேரம் ஒதுக்கவேண்டும்.

**படம் 6: கீழ்த் தொடக்கநிலைக்கான பாடவேளைகள் (தொ. 1 - 3)**

| | | | | |
|---|---|---|---|---|
| தொ 1-3 | பண்புள்ள குடிமக்கள் பாடம் **30** மணி நேரம் | வகுப்பாசிரியர் வழிகாட்டும் பாடவேளை **15** மணி நேரம் | பள்ளி சார்ந்த நற்குணமும் குடியியல் கல்வியும் **15** மணி நேரம் | ஓர் ஆண்டில் மொத்தம் 60 மணி நேரம் |

**படம் 7: மேல் தொடக்கநிலைக்கான பாடவேளைகள் (தொ. 4)**

| | | | | |
|---|---|---|---|---|
| தொ 4 | பண்புள்ள குடிமக்கள் பாடம் **45** மணி நேரம் | வகுப்பாசிரியர் வழிகாட்டும் பாடவேளை **15** மணி நேரம் | பள்ளி சார்ந்த நற்குணமும் குடியியல் கல்வியும் **15** மணி நேரம் | ஓர் ஆண்டில் மொத்தம் 75 மணி நேரம் |

**படம் 8: மேல் தொடக்கநிலைக்கான பாடவேளைகள் (தொ. 5 - 6)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தொ 5-6 | பண்புள்ள குடிமக்கள் பாடம் **45** மணி நேரம் | வகுப்பாசிரியர் வழிகாட்டும் பாடவேளை **15** மணி நேரம் | பாலியல் கல்வி **4** மணி நேரம் | பள்ளி சார்ந்த நற்குணமும் குடியியல் கல்வியும் **11** மணி நேரம் | ஓர் ஆண்டில் மொத்தம் 75 மணி நேரம் |

## பாடத்திட்டத்தை வடிவமைக்க வழிகாட்டிய கொள்கைகள்

### 1. மாணவர்களை மையமாகவும் பண்புகளை அடிப்படையாகவும் கொண்டமைந்த கல்வி

இப்பாடத்திட்டம் மாணவர்களின் வயதிற்கு உட்பட்டதாகவும் பொருத்தமானதாகவும் இருக்கவேண்டும் என்பதில் அதிக முக்கியத்துவம் கொடுத்து வடிவமைக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் எந்தெந்த நிலைகளில் எத்தகைய வளர்ச்சி அடைவார்கள், எவ்வாறு எண்ணுவார்கள், கற்பார்கள் என்பதை உறுதி செய்ய பல பிள்ளை வளர்ச்சிக் கோட்பாடுகள் வழிகாட்டியாக அமைந்துள்ளன.

ஆசிரியர்கள் கற்பிக்கும்போது கீழ்க்காண்பனவற்றைச் செய்யலாம்:

- மாணவர்கள் மற்றவருடன் அவர்கள் கொண்ட தினசரி அனுபவங்களிலிருந்து சுயமாகக் கற்றறிவதற்குத் தகுந்த வாய்ப்புகளை அளிக்கலாம்.
- பலதரப்பட்ட மாணவர்களிடம் பழகவும், அனுபவம் வழிக் கற்றலில் ஈடுபடவும் வாய்ப்பளிக்கலாம்.

### 2. நற்குணத்திற்கும் குடியியலுக்கும் சமமான முக்கியத்துவம் அளித்தல்

நற்குடிமக்களாகத் திகழ்வதற்கு முதலில் நற்குணம் அவசியம். மாணவர்களை நற்குடிமக்களாக உருவாக்க ஆசிரியர்கள் கீழ்க்காண்பனவற்றை ஊக்குவிக்கலாம்:

- சீரான அறநெறிக் கொள்கைகளுக்கு உட்பட்ட பொறுப்பான முடிவுகளை எடுத்தல்.
- சரியான காரணத்திற்காகத் துணிவுடன் செயல்படுதல்.
- தேசியக் கட்டுப்பாடுகளை உணர்ந்து, மன உறுதியுடனும் நம்பிக்கையுடனும் மாற்றங்களுக்கு ஏற்பத் திறன்மிக்க வகையில் வாய்ப்புகளைப் பயன்படுத்தி வெற்றி பெறுதல்.
- தம் சொந்த விருப்பங்களுக்கு அப்பாற்பட்டுக் குடும்பம், பள்ளி, சமூகம், தேசம், உலகம் ஆகிய நிலைகளில் மற்றவர்களின் மீது அக்கறை காட்டுதல்.
- சமூகத்திற்கு உதவ தம் நேரத்தை ஒதுக்குதல்.

### 3. தான் என்ற நிலையிலிருந்து உலகம் என்ற நிலைக்கு விரிவடைதல்

மாணவர்களின் வளர்ச்சி, அவர்கள் கொண்டுள்ள உறவுகளை அடிப்படையாகக் கொண்டமைந்தது (Bronfenbrenner, 1979). மாணவர்கள் கற்றுக்கொண்ட பண்புகளைக் குடும்பம், பள்ளி, சமூகம், தேசம், உலகம் ஆகிய நிலைகளில் நடைமுறைப்படுத்த ஆசிரியர்கள் ஊக்குவிக்கலாம். மாணவர்கள் தங்களைச் சுற்றி இருப்பவர்களோடு தொடர்புகொண்டு பழகும்போது சமூகத்தில் தங்களின் பங்கை ஏற்றுக்கொள்வதோடு தங்களது செயல்களின் விளைவுகளையும் அறிந்து செயல்படுவார்கள் என்று ஆய்வுகள் காட்டுகின்றன.

### 4. மாணவர்களின் வாழ்க்கை அனுபவங்களைச் சூழ்நிலைகளாக வழங்குதல்

நற்குணம் மற்றும் குடியியல் கல்வியைக் கற்பிக்க ஆசிரியர்கள் மாணவர்களின் வாழ்க்கை அனுபவங்களைப் பயன்படுத்துவார்கள். இதன் மூலம் மாணவர்களுக்குக் கற்பிக்கப்படும் அறிவு, திறன், பண்புகள், மனப்பான்மைகள் ஆகியவற்றைத் தக்க வைத்துக்கொள்ள முடியும். தங்களுக்குப் பழக்கமான சூழலில் கற்கும்போது மாணவர்களால் தாங்கள் கற்கும் புதிய தகவல்களைச் சிறப்பாகக் கற்றுக்கொள்ள முடியும். பண்புகளும், சமூக மனவுணர்வு சார்ந்த திறன்களும் நடைமுறையில் எப்படி இருக்கும் என்பதை மாணவர்கள் தெரிந்துகொள்வது மிக முக்கியம். மாணவர்கள் கீழ்த் தொடக்கநிலையிலிருந்து மேல் தொடக்கநிலைக்குச் செல்லும்போது அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள் மேலும் சிக்கல் நிறைந்தவை ஆகின்றன. இப்பாடத்திட்டத்தில் குறிப்பிட்டுள்ள அறிவு, திறன்கள், பண்புகள் மனப்பான்மைகள் ஆகியவற்றைப் படிப்படியாகக் கற்று மேல்நிலைக்குக் கொண்டு செல்ல இத்தகைய வாழ்க்கை அனுபவங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## கற்றல் கற்பித்தலுக்கு வழிகாட்டியாக விளங்கும் கொள்கைகள்

### 1. நற்குணம் மற்றும் குடியியல் கல்விக் கற்பித்தல் அனைத்து ஆசிரியர்களின் பொறுப்பாகும்

மாணவர்களை வழிநடத்தவும் பண்புகளை நிலைநாட்டவும் ஆசிரியர்களே தகுந்தவர்கள். ஆசிரியர்கள் மாணவர்களுக்கு நல்ல முன்மாதிரியாகத் திகழ்ந்து மாணவர்களைப் பண்புள்ளவர்களாக உருவாக்கத் தகுந்த கற்றல் அனுபவங்களை அமைத்துக் கொடுக்கவேண்டும். ஆசிரியர்கள் மாணவர்களிடத்தில் சுய மதிப்பு, தன்னம்பிக்கை, மீளும்தன்மை, பரிவு, இரக்கம் ஆகியவற்றை வளர்க்கவேண்டும். மாணவர்களைத் துடிப்புமிக்க நற்குடிமக்களாக உருவாக்கும் பொருட்டுப், பல்வேறு பணி மேம்பாட்டுப் பயிற்சி வகுப்புகளின் மூலம் ஆசிரியர்கள் தங்கள் திறன்களைத் தொடர்ந்து வளர்த்துக்கொள்ள வேண்டும்.

### 2. பண்புகளைக் கற்பித்தலும் நடைமுறைவழிக் கற்றலும்

இப்பாடத்திட்டத்தின் கற்றல் விளைவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவு, திறன் ஆகியவற்றை வெளிப்படையாகப் பகிர்ந்து கொள்ளும்போது, பண்புகள் கற்பிக்கப்படுகின்றன. அதே சமயம், முன் உதாரணமாக இருக்கும் மற்றவர்களின் நடத்தையையும் அவர்களின் சொந்த வாழ்க்கை அனுபவங்களையும் பார்த்து மாணவர்கள் பண்புகளைச் சுயமாகவே கற்றுக் கொள்ளலாம். மாணவர்களின் பண்புநல வளர்ச்சிக்கு ஆசிரியர்-மாணவர் நல்லுறவும் ஏற்புடைய சுற்றுச் சூழலும் இன்றியமையாதவை ஆகும்.

### 3. பலதரப்பட்ட கற்பித்தல் அணுகுமுறைகளின் வழிக் கற்பித்தல்

செய்முறைக் குறிப்புகள், திறன் பயிற்சி, ஆசிரியர் அல்லது சக மாணவர்களின் முன்மாதிரியான நடத்தை, நற்செயலை வலியுறுத்தும் சூழல்கள், கற்பிக்கத்தக்க தருணங்கள் ஆகியவற்றின் மூலம் மாணவர்கள் பண்புகளைக் கற்கின்றனர். 'தேசியக் கல்வியைப் போற்றும் நான்கு தினங்கள்', 'பண்புகளைச் செயல்படுத்தும் முறை', 'புறப்பாட நடவடிக்கைகள்' போன்ற கற்றல் அனுபவங்களை அமைத்துக் கொடுப்பதன் மூலம் மாணவர்கள் பண்புகள், அறிவு, திறன், மனப்பான்மை ஆகியவற்றைக் கற்கவும் செயல்படுத்தவும் ஆசிரியர்கள் வழி வகுக்கவேண்டும்.

### 4. பெற்றோருடன் ஒன்றிணைந்து செயல்படுதல்

மாணவர்களின் வளர்ச்சியில் பெற்றோருக்கு முக்கியப் பங்குண்டு. வீட்டுச் சூழலும் பள்ளிச் சூழலும் சமமான நிலையில் இருந்தால் மாணவர்கள் அதிகம் பயனடைவார்கள். வீட்டுச் சூழலும் பள்ளிச் சூழலும் சமமான நிலையில் இருந்தால் மாணவர்களின் கற்றல் மேம்படுவதோடு அவர்களின் சுயமரியாதையும் உயர்ந்து நல்ல நடத்தையோடும் நல்ல மனப்பான்மைகளோடும் செயல்படுவார்கள் என்று பல ஆய்வுகள் காட்டுகின்றன. மாணவர்களின் கற்றலை வீட்டிலும் வலியுறுத்த பெற்றோருக்குத் தேவையான ஆதரவைப் பள்ளிகள் வழங்கும். பள்ளி நிகழ்ச்சிகளைப் பற்றிப் பெற்றோருக்குத் தெரிவிப்பதோடு அவர்களை அவற்றில் ஈடுபடுத்தி அவர்களோடு ஒன்றிணைந்தும் செயல்படலாம்.

## நற்குணம் மற்றும் குடியியல் கல்வியில் மூன்று பிரதான யோசனைகள்

அடையாளம், உறவுகள், தெரிவுகள் ஆகியவையே நற்குணம் மற்றும் குடியியல் கல்வியில் மாணவர்கள் கற்க வேண்டிய மூன்று பிரதான யோசனைகளாகும்.

**அடையாளம்**:

ஒருவர் பின்பற்றும் பண்புகளும் கொள்கைகளும் அவரின் அடையாளத்தை வெளிக்கொணரும். தம்மைப் பற்றி நன்கு அறிந்தவர் தம் பலங்களையும் பலவீனங்களையும் தமது தனித்தன்மையையும் அறிந்திருப்பார் (Marcia, 1966)[2]. 8 முதல் 11 வயதுள்ள மாணவர்கள் தம்மைப் பற்றிப் புரிந்துகொள்ளும் திறனை வளர்த்துக்கொள்வது மிக அவசியமாகும். மாணவர்கள் குழந்தைப் பருவத்திலிருந்து இளமைப் பருவத்திற்குச் செல்லும் முன் அவர்களின் திறமைகளின் மீது தன்னம்பிக்கையும் நல்லெண்ணமும் கொண்டிருக்க வேண்டும் (Erikson, 1950[3], 1968[4]). இவ்வாற்றல்களே மாணவர்கள் தங்களைப் பற்றி அறிந்துகொள்ளவும் தம் செயல்களுக்குப் பொறுப்பேற்றுக் கொள்ளவும் மற்றவரோடு உறவாடுவதற்கும் உதவியாக அமையும். (Young, 1991)[5]. ஒருவரின் சுய அடையாளத்தை நிர்ணயிப்பதில் பண்புகளுக்குப் பங்குண்டு என்று ஆய்வுகள் காட்டுகின்றன (Holland, 2002)[6].

**உறவுகள்**:

சமுதாயத்துடன் மாணவர்கள் கொண்டிருக்கும் உறவுகளே ‘அவர்கள் யார்?, அவர்களால் யாராக முடியும்?, அவர்கள் ஏன், எப்படி மற்றவர்களுக்கு முக்கியமாகிறார்கள்?’, என்பனவற்றை நிர்ணயிக்கும்[7]. மற்றவர்களுடன் மாணவர்கள் கொண்டிருக்கும் தொடர்புகளே அவர்களின் அறிவு வளர்ச்சிக்கு உதவும் என்று சமூகக் கட்டமைத்தல் கோட்பாட்டாளர்கள் நம்புகின்றார்கள் (Vygotsky, 1962, Bandura, 1977)[8]. மாணவர்களின் வளர்ச்சிக்குச் சமூகச் சூழல்கள் மிக அவசியமாகும் (Bronfenbrenner, 1986)[9]. மாணவர்கள்

---

[2] Marcia, J. E., (1966), Development and validation of ego identity status, Journal of Personality and Social Psychology 3, pp. 551-558.

[3] Erikson, E.H. (1950). Childhood and society. New York: W. W. Norton.

[4] Erikson, E.H. (1968). Identity: Youth and crisis. New York: W. W. Norton.

[5] Elliot, S.N, Kratochwill, T.R, Littlefield Cook, J., Travers, J.F (2000) *Educational Psychology* (3rd Ed) pp 102, MCGraw Hill, USA.

[6] Holland, R.W (2002), Motivated Decision Making; Effects of Activation and Self-Centrality of Values on Choices and Behaviour, *Journal of Personality and Social Psychology Vol 82*, No. 3, pp. 434-447.

[7] National Scientific Council on the Developing Child(2004). Young children develop in an environment of relationships. Working Paper No. 1, Harvard University. Retrieved from http://www.developingchild.net.

[8] J. Santrock, V. Woloshyn, T. Gallagher, T. Petta, Z. Marini (2010), *Educational Psychology* (3rd Canadian Edition), McGraw-Hill Higher Education pp53.

[9] Bronfenbrenner, U. (1979). The ecology of human development. Cambridge, MA: Harvard University Press.

மற்றவர்களோடு கொண்டிருக்கும் உறவுகளே அவர்களின் உலக அனுபவத்தைத் தீர்மானிக்கின்றன. மாணவர்களின் அறிவு வளர்ச்சி, சமூக வளர்ச்சி, மனவுணர்வு சார்ந்த வளர்ச்சி, உடல் வளர்ச்சி, அறநெறி வளர்ச்சி முதலான அனைத்து வளர்ச்சிகளையும் உறவுகள் பாதிக்கின்றன. மாணவர்கள் வளர வளர அவர்கள் மற்றவர்களுடன் நல்லுறவுகொள்ளத் தேவையான பிறர் நலன் கருதும் திறனும் (Selman, 1980)[10] பிறர் நிலையிலிருந்து சிந்திக்கும் திறனும்[11] அதிகரிக்கும். இத்திறன்கள் மாணவர்கள் எதிர்காலத்தில் பிறருடன் நல்லுறவு மேற்கொள்வதற்கு உறுதுணையாக அமையும்.

**தெரிவுகள்**:

ஒருவர் சரியான தெரிவுகளைத் தேர்ந்தெடுப்பதற்குப் பண்புகள் வழிகாட்டியாக அமைகின்றன. ஒருவர் தேர்ந்தெடுக்கும் தெரிவுகள் அவரின் குணத்தையும் பண்புகளையும் வெளிப்படுத்தும் (Wilis, 1998)[12]. மாணவர்கள் முடிவுகளை எடுப்பதற்கும், தாங்கள் எடுக்கும் முடிவுகள் 'சரியா தவறா' என்றும், 'அவை ஏன் சரி, ஏன் தவறு' என்று புரிந்துகொள்வதற்கும் பண்புகள் மிக அவசியமாகும் (Berkowitz, 2005)[13]. மாணவர்கள் தங்கள் பண்புகளை வெளிப்படுத்தவும் நெருக்கடியான சூழ்நிலைகளில் 'சரி' என்று நினைப்பதைச் செய்யவும் தெரிவுகள் மிக அவசியம் (Lickona, 1991)[14]. எனவே, மாணவர்கள் பண்புகளைத் தெளிவுபடுத்திக்கொள்ளவும் பயன்படுத்திக்கொள்ளவும் தெரிவுகள் அவசியமாகும்.

---

[10] Selman, R. (1980). *The growth of interpersonal understanding.* New York: Academic Press.

[11] Preston, S.D., & de Waal, F.B.M. (2002). Empathy: Its ultimate and proximate bases. *Behavioral and Brain Sciences, 25,* 1-72.

[12] Wilis, C.(1998).Cooperative Extension, *Decision Making The Foundation for Responsible Behaviour* 7/98.

[13] Berkowitz,M. (2005), What works in character education: A research-driven guide for educators. Retrieved July 18, 2012, from Character education partnership database.

[14] Lickona, T. (1991), Educating For Character , New York: Bantam.

**முக்கியக் கருத்துகளும் மைய வினாக்களும்**

ஒவ்வொரு பிரதான யோசனையையும் விளக்குவதற்காக முக்கியக் கருத்துகளும் மைய வினாக்களும் உருவாக்கப்பட்டுள்ளன. மாணவர்களுக்கிடையே உரையாடலை வழிநடத்துவதற்கு மைய வினாக்கள் உதவும். இந்த மைய வினாக்களை மேலும் தெளிவாக விளக்குவதற்காக ஒவ்வொரு நிலையிலும் சுலபமான கேள்விகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மாணவர்கள் தம் வாழ்க்கையில் சந்திக்கும் பலதரப்பட்ட அனுபவங்களைக் கையாளத் தேவைப்படும் பண்புகள், மனப்பான்மைகள், திறன்கள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றைப் பற்றிச் சிந்திக்க இக்கேள்விகள் ஊக்கமளிக்கும்.

<table>
<tr><th></th><th>பிரதான யோசனை 1:<br>அடையாளம்</th><th>பிரதான யோசனை 2:<br>உறவுகள்</th><th>பிரதான யோசனை 3:<br>தெரிவுகள்</th></tr>
<tr><td>கருத்துச் சுருக்கம்</td><td colspan="3">அடையாளம், உறவுகள், தெரிவுகள் ஆகியவை ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை.<br>• மாணவர்கள் தம்மைப் பற்றி அறிந்திருந்தால்தான் மற்றவருடன் நல்ல முறையில் பழக முடியும்.<br>• மாணவர்கள் மற்றவர்களோடு ஏற்படுத்திக்கொள்ளும் உறவுகள் அவர்களின் அடையாளத்தை உருவாக்க உதவுவதோடு அவர்கள் எடுக்கும் முடிவுகளையும் பாதிக்கும்.<br>• மாணவர்களின் உடன்பாடான தெரிவுகள் அவர்களின் அடையாளத்தையும் அவர்கள் அமைத்துக்கொள்ளும் உறவுகளையும் பாதிக்கும்.<br>மாணவர்கள் நல்ல குணமுடையவர்களாகவும் உலகிற்குப் பயனுள்ள குடிமக்களாகவும் வாழ மூன்று பிரதான யோசனைகளும் பண்புகளை அடிப்படையாகக் கொண்டமைய வேண்டும்.</td></tr>
<tr><td>முக்கியக் கருத்துகள்<br>(மாணவர்கள் அறிந்திருக்க வேண்டியவை)</td><td>மாணவர்கள் இவற்றைப் புரிந்துகொள்வர்:<br>• அடையாளம் சிக்கல் தன்மையுடையது<br>• அடையாளம் அபிப்பிராயங்களையும் உறவுகளையும் வடிவமைக்கும்.</td><td>மாணவர்கள் இவற்றைப் புரிந்துகொள்வர்:<br>• உறவுகள் வாழ்க்கைக்கு அடிப்படையானவை<br>• உறவுகள் காலப்போக்கில் மாறக்கூடும்</td><td>மாணவர்கள் இவற்றைப் புரிந்துகொள்வர்:<br>• தெரிவுகள் குணத்தை வடிவமைக்கும்.<br>• தெரிவுகள் தன்னையும் மற்றவரையும் பாதிக்கும்</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| **சிறந்த மைய வினாக்கள்** (Overarching Key Questions) (மாணவர்கள் முக்கியக் கருத்துகளைப் புரிந்துகொள்ள இக்கேள்விகள் உதவும்) | • நான் யார்?<br>• எனது தனித்தன்மை என்ன?<br>• என்னைச் சுற்றி உள்ளவர்களையும் உலகையும் நான் எப்படிக் காண்கிறேன்? | • நான் உறவுகளைப் பற்றி என்ன நினைக்கிறேன்?<br>• உறவுகளை ஏன் அமைத்துக் கொள்ள வேண்டும்?<br>• உறவுகள் எவ்வாறு என்னையும் மற்றவர்களையும் பாதிக்கின்றன? | • என்னால் யாராக முடியும்?<br>• நான் எந்தத் தெரிவுகளைத் தேர்ந்தெடுப்பேன்?<br>• நான் எந்த அடிப்படையில் தெரிவுகளைத் தேர்ந்தெடுப்பேன்? |



RESTRICTED

| நிலைகள் | | மைய வினாக்கள் | | |
|---|---|---|---|---|
| | | அடையாளம் | உறவுகள் | தெரிவுகள் |
| **தான்** | **நான் நானாகவே இருப்பதும்; நான் எதிர்காலத்தில் எப்படிப்பட்டவராக இருக்க விரும்புவதும்.** | நான் எவ்வாறு மற்றவரைப் போல இருக்கிறேன்? நான் எவ்வாறு மற்றவரிடமிருந்து வேறுபடுகிறேன்? | எனது சுய அபிப்பிராயமும் சுய நிர்வாகமும் எவ்வாறு நான் பிறரோடு கொண்டுள்ள உறவுகளைப் பாதிக்கின்றன? | என் தெரிவுகள் எவ்வாறு எனக்கும் மற்றவர்களுக்கும் நன்மை அளிக்கின்றன? |
| **குடும்பம்** | **குடும்பப் பிணைப்பினை வலுப்படுத்துதல்** | என் குடும்பத்தில் நான் யார்? | நான் எவ்வாறு எனது குடும்ப உறவுகளை வளர்த்துக் கட்டிக்காப்பேன்? | என் செயல்கள் எவ்வாறு என்னையும் என் குடும்பத்தையும் பாதிக்கின்றன? |
| **பள்ளி** | **நல்ல நட்புகளையும் குழு உணர்வையும் வளர்த்தல்** | நான் எப்படிப்பட்ட நண்பனாக இருக்கிறேன்? குழு வேலையில் நமது பங்கு என்ன? | என் நண்பர்கள் யார்? நாம் எவ்வாறு சமூகமாக ஒன்று சேர்ந்து செயல்படுகிறோம்? | நான் நட்பிலிருந்து எதிர்பார்ப்பவை யாவை? ஒரு குழுவை உருவாக்குவதற்கு நமது வலிமையை எவ்வாறு பயன்படுத்தலாம்? |
| **சமூகம்** | **நம் சமூகத்தைப் புரிந்துகொண்டு அரவணைக்கும் சமுதாயத்தை உருவாக்குதல்** | நம்மைப் பொறுத்தவரையில் அரவணைக்கும் சமுதாயம் என்றால் என்ன? | நாம் அரவணைக்கும் சமுதாயத்தில் எவ்வாறு மற்றவர்களைப் புரிந்துகொண்டு அவர்களோடு கருத்துகளைப் பரிமாறிக்கொள்கிறோம்? | அரவணைக்கும் சமுதாயத்தை உருவாக்குவதில் நமது பங்கு என்ன? |


| நிலைகள் | | மைய வினாக்கள் | | |
|---|---|---|---|---|
| | | அடையாளம் | உறவுகள் | தெரிவுகள் |
| **தேசம்** | **தேசிய அடையாள உணர்வை வளர்த்தலும் தேசிய முன்னேற்றத்திற்குப் பங்களித்தலும்** | நம்மை எவை சிங்கப்பூரர்களாக அடையாளம் காட்டுகின்றன? | நான் மற்றவர்களோடு கொண்டிருக்கும் உறவுகள் எவ்வாறு தேசிய வளர்ச்சிக்கு உதவுகின்றன? | நாம் சிங்கப்பூரின் நலனில் கொண்டுள்ள அக்கறையை எவ்வாறு வெளிக்காட்டலாம்? |
| ***உலகம்** | **மாறிவரும் உலகத்தில் துடிப்புமிக்க குடிமகனாக இருத்தல்** | மாறிவரும் உலகத்தில் துடிப்புமிக்க குடிமகனாக இருப்பது என்றால் என்ன? | நாம் மாறிவரும் உலகத்தில் எப்படி மற்றவர்களோடு கருத்துப் பரிமாற்றம் செய்கிறோம்? | நாம் மாறிவரும் உலகத்தின் தேவைகளுக்கேற்ப எவ்வாறு நம் பலங்களையும் திறன்களையும் பயன்படுத்தலாம்? |

(*உலகம் என்ற நிலை தொடக்கநிலை 5 - 6 மாணவர்களுக்கு மட்டுமே கற்பிக்கப்படும்)

## தொடக்கநிலைப் பள்ளிகளுக்கான நற்குணம் மற்றும் குடியியல் கல்விப் பாடத்திட்டத்தின் பாடப்பொருள்

**நிலை**: தான்

**நோக்கம்**: நான் நானாகவே இருப்பதும்; நான் எதிர்காலத்தில் எப்படிப்பட்டவராக இருக்க விரும்புவதும்.




**<u>கற்றல் விளைவுகள்</u>**:

**1:** சுய விழிப்புணர்வைப் பெற்றுச் சுய நிர்வாகத் திறன்களைப் பயன்படுத்திச் சுய நலனையும் செயல்திறனையும் அடைதல்

**2:** நேர்மையுடன் நடந்துகொள்வதோடு அறநெறிக் கொள்கைகளை நிலைநாட்டும் விதத்தில் பொறுப்பான முடிவுகளை எடுத்தல்

**4:** மீளும்தன்மையுடன் இருந்து சவால்களை வாய்ப்புகளாக மாற்றும் திறமையைப் பெற்றிருத்தல்

**<u>மைய வினாக்கள்:</u>**

**அடையாளம்:** நான் எவ்வாறு மற்றவரைப் போல இருக்கிறேன்? நான் எவ்வாறு மற்றவரிடமிருந்து வேறுபடுகிறேன்?

**உறவுகள்:** எனது சுய அபிப்பிராயமும் சுய நிர்வாகமும் எவ்வாறு நான் பிறரோடு கொண்டுள்ள உறவுகளைப் பாதிக்கின்றன?

**தெரிவுகள்**: என் தெரிவுகள் எவ்வாறு எனக்கும் மற்றவர்களுக்கும் நன்மை அளிக்கின்றன?

| பாடப்பொருள் | | தொடக்கநிலை | | |
|---|---|---|---|---|
| | | 1-2 | 3-4 | 5-6 |
| அறிவு | **எனது சுய அபிப்பிராயம்**<br>• ஒவ்வொருவரும் தனித்தன்மையும் வேறுபாடும் கொண்டவர்கள் என்பதை அறிதல் | ✓ | | |
| | • தனது விருப்பு வெறுப்புகளையும் பலம் பலவீனங்களையும் அறிதல் | ✓ | | |
| | • தனது திறமைகளையும் பலங்களையும் குணநலன்களையும் விருப்பங்களையும் வெளிக்காட்ட அறிதல் | | ✓ | ✓ |
| | • ஒருவரின் திறமைகளையும் பலங்களையும் குணநலன்களையும் விருப்பங்களையும் மதிக்க வேண்டியதன் காரணத்தை அறிதல் | | | ✓ |
| | **உணர்வுகளைப் புரிந்துகொள்ளுதல்**<br>• வெவ்வேறு உணர்வுகளை அறிதல் | ✓ | ✓ | |
| | • கோபம், பயம், குற்றவுணர்வு, கவலை, மன அழுத்தம் போன்ற உணர்வுகள் ஒருவருக்குச் சங்கடத்தை உண்டாக்கும் என்பதை அறிதல் | ✓ | ✓ | |
| | • சங்கடமான உணர்வுகளுக்கும் (uncomfortable emotions) அவசரப்பட்டுச் செய்யப்படும் செயல்களுக்கும் பின்விளைவுகள் உண்டு என்பதைப் புரிந்துகொள்ளுதல் | ✓ | ✓ | |
| | • சங்கடமான உணர்வுகளையும் அவசரப்பட்டுச் செய்யப்படும் செயல்களையும் நிர்வகிக்கும் வழிகளை அறிதல் | ✓ | ✓ | ✓ |
| | • சங்கடமான நிலையை உண்டாக்கும் உணர்வுகள் ஒருவரைப் பொறுப்பான முடிவுகளை எடுக்கத் தூண்டுவதோடு அவரின் சுய முன்னேற்றத்திற்கும் வழிவகுக்கலாம் என்பதை அறிதல் | | ✓ | ✓ |
| | • ஒருவரின் எண்ணம் அவரின் உணர்வுகளையும் நடத்தையையும் பாதிக்கும் என்பதைப் புரிந்துகொள்ளுதல் | | ✓ | ✓ |
| | • மன அழுத்தம் (stress) மற்றும் பதற்றத்தின் (anxiety) அறிகுறிகளையும் நடத்தையையும் அறிதல் | | ✓ | ✓ |
| | • மன அழுத்தம் மற்றும் பதற்றத்தின் காரணங்களை அறிதல் | | | ✓ |


| பாடப்பொருள் | | தொடக்கநிலை | | |
| --- | --- | --- | --- | --- |
| | | 1-2 | 3-4 | 5-6 |
| **அறிவு** | **எனது முன்னுரிமைகள்**<br>• எளிமையான கற்றல் இலக்குகளை அமைத்தலின் முக்கியத்துவத்தை அறிதல் | ✓ | | |
| | • இலக்குகள் என்றால் என்னவென்றும் அவற்றை அமைப்பதற்கான காரணங்களையும் அறிதல் | | ✓ | |
| | • இலக்குகளையும் விருப்பங்களையும் அடைவதில் குறியாக இருப்பதற்கான வழிகளை அறிதல் | | | ✓ |
| | **வாழ்க்கையில் இடம்பெறும் மாற்றங்கள்**<br>• ஒருவரின் வாழ்க்கையில் சுற்றிலுமுள்ள மாற்றங்களை அறிதல் | ✓ | | |
| | • வாழ்க்கையில் மாற்றங்கள் உள்ளன என்பதைப் புரிந்துகொண்டு அவற்றை ஏற்றுக்கொள்ளுதல் | | ✓ | ✓ |
| | • மாற்றங்களோடு சவால்களும் வரும் என்பதையும் அவற்றை ஒருவர் எவ்வாறு கையாளலாம் என்பதையும் அறிதல்<br>○ மாற்றங்களைச் சமாளிக்கும் வழிகளை அறிதல் | ✓ | ✓ | ✓ |
| | ○ எங்கு, எப்போது உதவி நாடலாம் என்பதை அறிதல் | ✓ | ✓ | ✓ |
| | ○ மீளும்தன்மையுடன் இருப்பது என்றால் என்னவென்றும் மீளும்தன்மை மிக்கவராக இருக்க ஒருவர் என்ன செய்யலாம் என்பதையும் அறிதல் | | ✓ | ✓ |
| | ○ மீளும்தன்மையை வளர்க்க உதவும் கூறுகளைப் புரிந்துகொள்ளுதல் | | | ✓ |
| **திறன்கள்** | **என்னைப் பற்றி அறிதல்**<br>• தன்னைப் பற்றி நல்ல விதமாக நினைத்துக்கொள்ளுதல்<br>○ தன்னைப் பற்றி உடன்பாடான கருத்துகளை வெளிப்படுத்துதல் | ✓ | ✓ | |
| | ○ தன்னைப் பிறரிடம் நல்ல முறையில் வெளிக்காட்டுதல் | | | ✓ |
| | ○ மாற்றங்களையும் சவால்களையும் சமாளிக்கத் தேவையான திறன்களையும் மனப்பான்மைகளையும் பண்புகளையும் அடையாளங்காணுதல் | | | ✓ |
| | **உணர்வுகளை அடையாளங்காணுதல்**<br>○ பலவகையான வார்த்தைகள் மூலம் உணர்வுகளை விவரித்தல் | ✓ | | |

| பாடப்பொருள் | | தொடக்கநிலை | | |
|---|---|---|---|---|
| | | 1-2 | 3-4 | 5-6 |
| **திறன்கள்** | ○ பலதரப்பட்ட உணர்வுகளை விவரித்தலும் அவற்றுக்கான காரணங்களை அடையாளங்காணுதலும் | | ✓ | |
| | ○ மன அழுத்தம் மற்றும் பதற்றம் ஆகியவற்றின் காரணங்களை விவரித்தலும் அவற்றுக்கான காரணங்களைக் கண்டறிதலும் | | | ✓ |
| | **உணர்வுகளை நிர்வகித்தல்**<br>• சங்கடமான உணர்வுகளைத் தகுந்த வழிகளில் நிர்வகித்தல் | ✓ | | |
| | • தகுந்த வழிகளை உருவாக்கி<br>○ வெவ்வேறு சூழ்நிலைகளில் உள்ள சங்கடமான உணர்வுகளை வெளிப்படுத்துதலும் நிர்வகித்தலும் | | ✓ | ✓ |
| | ○ மற்றவரின் எதிர்பார்ப்பினால் ஏற்படும் எதிர்மறையான பாதிப்புகளை நிர்வகித்தல் | | | ✓ |
| | • உணர்வுகளைப் பற்றிச் சிந்தித்தலும் தன் செயலால் தனக்கும் மற்றவருக்கும் ஏற்படக்கூடிய பாதிப்புகளையும் பின்விளைவுகளையும் மீள்நோக்கிப் பார்த்தலும் | | | ✓ |
| | **மன அழுத்தத்தை நிர்வகித்தல்**<br>• மன அழுத்தம் மற்றும் பதற்றத்திற்கான அறிகுறிகளையும் அவற்றுடன் தொடர்புடைய நடத்தைகளையும் கண்டறிதல் | | ✓ | ✓ |
| | • மன அழுத்தத்தையும் பதற்றத்தையும் கையாள தகுந்த வழிகளை உருவாக்குதல் | | ✓ | ✓ |
| | **உணர்ச்சி வேகத்தைக் கட்டுப்படுத்துதல்** (impulse control)<br>• ஒருவர் உணர்ச்சி வசப்பட்டுச் செயல்பட்டுள்ளார் என்பதைக் கண்டறிதல் | | ✓ | ✓ |
| | • உடன்பாடான பின்விளைவுகளை உண்டாக்கும் வெவ்வேறு நடத்தைகளை உருவாக்குதல் | | ✓ | ✓ |
| | **உதவி நாடுதல்**<br>• சவால்களைச் சந்திக்கும்போது மற்றவர்களிடம் உதவி நாடுதல் | ✓ | ✓ | ✓ |
| | **இலக்குகளை அமைத்தல்**<br>• எளிமையான கற்றல் இலக்குகளை அமைத்தல் | ✓ | | |
| | • சுய வளர்ச்சிக்கான இலக்குகளை அமைத்தலும் அவற்றை அடைய முயற்சித்தலும் | | ✓ | ✓ |

| பாடப்பொருள் | | தொடக்கநிலை | | |
| --- | --- | --- | --- | --- |
| | | 1-2 | 3-4 | 5-6 |
| **திறன்கள்** | • ஒருவரின் வளர்ச்சியைக் கண்காணித்து அவரது கற்றல் இலக்குகளையும் திட்டங்களையும் மேம்படுத்துதல் | | ✓ | ✓ |
| | • சுய ஊக்கமளிக்கும் (self-motivation) எண்ணங்களை வளர்த்துக்கொள்ளுதல் | | | ✓ |
| | **பொறுப்புடன் முடிவெடுத்தல்**<br>• முடிவெடுப்பதற்கு முன் அனைத்துத் தெரிவுகளையும் அவற்றின் விளைவுகளையும் சீர்தூக்கிப் பார்த்தல் | ✓ | ✓ | ✓ |
| | • பண்புகளின் அடிப்படையில் முடிவுகளை எடுத்தல் | ✓ | ✓ | ✓ |
| | • ஒருவரின் செயல்கள் மற்றவர்களை எவ்வாறு பாதிக்கும் என்று மீள்நோக்குதல் | ✓ | ✓ | ✓ |
| | • சவால்களை எதிர்நோக்கினாலும் துணிவுடன் சரியானவற்றையே செய்தல் | ✓ | ✓ | ✓ |
| | **மீள்நோக்குதல்**<br>• தனது அனுபவங்களைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்து அவற்றிலிருந்து கற்றுக்கொள்ளுதல் | ✓ | | |
| | • மற்றவர்களின் அனுபவங்களைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்து அவற்றிலிருந்து கற்றுக் கொள்ளுதல் | | ✓ | ✓ |
| | • வாழ்க்கையில் ஏற்பட்ட சவால்களிலிருந்து அடைந்த நன்மைகளைப் பற்றிச் சிந்தித்தல் | | | ✓ |
| **பண்புகள்** | **பொறுப்புடன்** தன் மீது பரிவு காட்டுதல் | ✓ | ✓ | ✓ |
| | **பொறுப்புடன்** முடிவெடுத்தல் | ✓ | ✓ | ✓ |
| | சுய **மரியாதை** கொண்டிருத்தல் | ✓ | ✓ | ✓ |
| | மன உறுதியின் மூலம் **மீளும்தன்மையை** வெளிக்காட்டுதல் | ✓ | ✓ | ✓ |
| **மனப்பான்மைகள்** | திறமைகளை அறிந்து தன் மீது நம்பிக்கை கொள்ளுதல் | ✓ | ✓ | ✓ |
| | வாழ்க்கையைப் பற்றித் தெரிந்துகொள்ள ஆர்வம் கொண்டிருத்தல் | ✓ | ✓ | ✓ |
| | சுய கட்டுப்பாடு கொண்டிருத்தல் | ✓ | ✓ | ✓ |
| | மாற்றங்களையும் சவால்களையும் சந்திக்கத் துணிச்சலும் விடாமுயற்சியும் கொண்டிருத்தல் | ✓ | ✓ | ✓ |
| | இலக்குகளை அடைய சுய ஊக்கம் கொண்டிருத்தல் | ✓ | ✓ | ✓ |

| கீழ்க்காணப்படும் மாணவர்களின் வாழ்க்கை அனுபவங்களைப் பயன்படுத்தி இந்நிலையில் கொடுக்கப்பட்டுள்ள அறிவு, திறன், பண்புகள் மற்றும் மனப்பான்மைகளைக் கற்பிக்கலாம்: | | |
|---|---|---|
| **தொடக்கநிலை 1 - 2க்கான ஏற்ற சூழல்கள்** | **தொடக்கநிலை 3 - 4க்கான ஏற்ற சூழல்கள்** | **தொடக்கநிலை 5 - 6க்கான ஏற்ற சூழல்கள்** |
| • பள்ளியில் முதல் நாள்<br>• பள்ளியின் முதல் நாளன்று ஏற்படும் மாற்றங்களை அனுசரித்தல்<br>• பள்ளியின் வழக்க முறைகளைப் பின்பற்றுதல்<br>• பெற்றோரின் உதவியின்றித் தன்னைச் சுயமாகச் சமாளித்தல்<br>• புதிய பாடங்களைக் கற்றல்<br>• புதிய நட்புகளை ஏற்படுத்திக் கொள்ளுதல் | • புதிய வகுப்பில் மாற்றங்களைச் சமாளித்தல்<br>• புதிய வகுப்பில் நிலைபெறுதல்<br>• புதிய பாடங்களைக் கற்றல்<br>• வீட்டுப்பாடங்களை முடித்தல்<br>• தேர்வுகளுக்குத் தயாராகுதல்<br>• புறப்பாட நடவடிக்கையைத் தேர்ந்தெடுத்தல்<br>• புறப்பாட நடவடிக்கையில் ஈடுபடுதல்<br>• நேரத்தைத் திட்டமிடுதல்<br>• பணத்தையும் வீட்டுச் சாவியையும் கையாளுதல்<br>• பாதுகாப்பாகப் பள்ளிக்குச் சென்றுவிட்டு வீடு திரும்புதல்<br>• இணையம் வழிப் பிறரை அறிதல்<br>• உடல் ரீதியான மாற்றங்களை உணருதல் | • தலைவராக இருத்தல்<br>• தேசியத் தேர்வை எழுதுதல்<br>• உயர்நிலைப் பள்ளியைத் தேர்ந்தெடுத்தல்<br>• பின்னடைவுகளையும் பிரச்சினைகளையும் எதிர்நோக்குதல் |

**நிலை**: குடும்பம்
**நோக்கம்**: குடும்பப் பிணைப்பினை வலுப்படுத்துதல்




<u>**கற்றல் விளைவுகள்**:</u>

**1**: சுய விழிப்புணர்வைப் பெற்றுச் சுய நிர்வாகத் திறன்களைப் பயன்படுத்திச் சுய நலனையும் செயல்திறனையும் அடைதல்

**2**: நேர்மையுடன் நடந்துகொள்வதோடு அறநெறிக் கொள்கைகளை நிலைநாட்டும் விதத்தில் பொறுப்பான முடிவுகளை எடுத்தல்

**3**: சமூக விழிப்புணர்வைப் பெற்று மற்றவருடன் பழகவும் கருத்துப்பரிமாற்றம் செய்யவும் தேவையான திறன்களைப் பயன்படுத்தி நல்ல உறவுமுறைகளை அமைத்துக்கொண்டு அவற்றை நிலைநாட்டுதல்

<u>**மைய வினாக்கள்**:</u>
**அடையாளம்:** என் குடும்பத்தில் நான் யார்?
**உறவுகள்:** நான் எவ்வாறு எனது குடும்ப உறவுகளை வளர்த்துக் கட்டிக்காப்பேன்?
**தெரிவுகள்**: என் செயல்கள் எவ்வாறு என்னையும் என் குடும்பத்தையும் பாதிக்கின்றன?

| பாடப்பொருள் | | தொடக்கநிலை | | |
|---|---|---|---|---|
| | | 1-2 | 3-4 | 5-6 |
| **அறிவு** | **நல்ல குடும்ப உறவுகள்** | | | |
| | • உடன்பாடான குடும்ப உறவுகள் எப்படி இருக்கும் என்பதை அறிதல் | ✓ | ✓ | ✓ |
| | • குடும்பத்தில் ஒருவருக்குள்ள முக்கியமான பங்கையும் பொறுப்பையும் புரிந்துகொள்ளுதல் | ✓ | ✓ | ✓ |
| | **குடும்ப விவகாரங்கள்** | | | |
| | • குடும்பத்திற்குத் தேவை ஏற்படும்போது எங்கு, எப்போது உதவி நாட வேண்டும் என்பதை அறிதல் | | ✓ | ✓ |
| | • குடும்பத்தில் ஏற்படும் மாற்றங்களைச் சமாளிக்கும் வழிகளைப் புரிந்துகொள்ளுதல் | | ✓ | ✓ |
| | **குடும்பத்தின் மீது பரிவு காட்டுதல்** | | | |
| | • வீட்டிலுள்ளவர்களிடம் பரிவு காட்ட வேண்டியதன் அவசியத்தை அறிதல் | ✓ | ✓ | ✓ |
| | • வீட்டிலுள்ளவர்களிடம் பரிவு காட்டும் வழிகளை அறிதல் | ✓ | ✓ | |
| | • வீட்டிலுள்ளவர்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் வழிகளை அறிதல் | | | ✓ |
| **திறன்கள்** | **உடன்பாடான உறவுகளை ஏற்படுத்தி அவற்றைக் கட்டிக்காத்தல்** | | | |
| | • மற்றவர்கள் கூறுவதைக் கவனத்துடன் கேட்டுத் தகுந்த முறையில் பதிலளித்தல் | ✓ | ✓ | |
| | • மற்றவர்களிடம் மரியாதையாகப் பேசுதல் | ✓ | ✓ | ✓ |
| | • மற்றவர்கள் மீது பரிவும் அக்கறையும் காட்டுதல் | ✓ | ✓ | ✓ |
| | • குடும்பத்தினருக்கு முக்கியத்துவம் அளித்தல் | | ✓ | ✓ |
| | • மற்றவர்களின் உணர்வுகளை அவர்களின் மெய்ப்பாடு மூலம் அறிதல் | | ✓ | ✓ |
| | • விளக்கம் பெறுவதோடு தன்னுடைய எண்ணங்களையும் உணர்வுகளையும் தகுந்த முறையில் மற்றவர்களிடம் வெளிப்படுத்துதல் | | ✓ | ✓ |
| | • குடும்பத்திலுள்ள மற்றவர்களுக்கு முதலிடம் கொடுத்தல் | | | ✓ |

| பாடப்பொருள் | | தொடக்கநிலை | | |
|---|---|---|---|---|
| | | 1-2 | 3-4 | 5-6 |
| **திறன்கள்** | **பிறர் நலன் கருதுதல்**<br>• மற்றவர்களின் எண்ணங்களையும் உணர்வுகளையும் மதித்தல் | ✓ | ✓ | |
| | • பலவகையான சூழ்நிலைகளிலும் குடும்பத்தினரிடம் கூருணர்வுடன் நடந்துகொள்ளுதல் | | ✓ | ✓ |
| | **பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல்**<br>• குடும்பத்தினருடன் ஏற்படும் கருத்து வேறுபாடுகளைக் கையாள ஏற்புடைய வழிமுறைகளைப் பின்பற்றுதல் | ✓ | ✓ | ✓ |
| | **உதவி நாடுதல்**<br>• குடும்பத்தினரிடமிருந்து உதவி நாடுதல் | ✓ | ✓ | ✓ |
| | **உதவி அளித்தல்**<br>• சவால்களை எதிர்நோக்கும் குடும்பத்தினருக்கு உதவியளித்தல் | | ✓ | ✓ |
| | **பொறுப்புடன் முடிவெடுத்தல்**<br>• முடிவெடுப்பதற்கு முன் அனைத்துத் தெரிவுகளையும் அவற்றின் விளைவுகளையும் சீர்தூக்கிப் பார்த்தல் | ✓ | ✓ | ✓ |
| | • பண்புகளின் அடிப்படையில் முடிவுகளை எடுத்தல் | ✓ | ✓ | ✓ |
| | • ஒருவரின் செயல்கள் மற்றவர்களை எவ்வாறு பாதிக்கும் என்று மீள்நோக்குதல் | ✓ | ✓ | ✓ |
| | • சவால்களை எதிர்நோக்கினாலும் துணிவுடன் சரியானவற்றையே செய்தல் | | ✓ | ✓ |
| | **மீள்நோக்குதல்**<br>• வீட்டிலுள்ளவர்களிடம் எவ்வாறு பரிவு, மரியாதை, பொறுப்பு ஆகியவை காட்டப்பட்டன என்பதைச் சிந்தித்து அவற்றை எவ்வாறு மேலும் சிறப்பான முறையில் வெளிக்காட்டலாம் என்பதைக் கற்றல் | ✓ | ✓ | ✓ |
| **பண்புகள்** | குடும்பத்தில் **பொறுப்புடன்** நடந்துகொள்ளுதல் | ✓ | ✓ | ✓ |
| | குடும்பத்தினரின் எண்ணங்களுக்கும் உணர்வுகளுக்கும் தேவைகளுக்கும் **பரிவு** காட்டுதல் | ✓ | ✓ | ✓ |
| | குடும்பத்தினருடன் **நல்லிணக்கத்துடன்** நடந்துகொள்ளுதல் | ✓ | ✓ | ✓ |

| பாடப்பொருள் | | தொடக்கநிலை | | |
|---|---|---|---|---|
| | | 1-2 | 3-4 | 5-6 |
| பண்புகள் | வீட்டிலுள்ளவரிடம் **மரியாதை** காட்டுதல் | ✓ | ✓ | ✓ |
| மனப்பான்மைகள் | வீட்டிலுள்ளவர்களிடம் தன்னடக்கத்துடன் உரையாடுதல் | ✓ | ✓ | ✓ |
| | குடும்ப உறுப்பினர்களிடம் காணப்படும் வேறுபாடுகளை உணர்ந்து முக்கியத்துவம் அளித்தல் | ✓ | ✓ | ✓ |
| | வீட்டிலுள்ளவர்களின் நிலையிலிருந்து சிந்தித்துப் பார்த்தல் | ✓ | ✓ | ✓ |
| | தன்னால் குடும்பத்தில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்பதில் நம்பிக்கை கொள்ளுதல் | ✓ | ✓ | ✓ |
| | குடும்பத்தினருடன் பகிர்ந்துகொள்ளுதலும் அவர்களுக்கு முதலிடம் கொடுத்தலும் | ✓ | ✓ | ✓ |
| | வீட்டில் உள்ளவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு முயற்சிகள் எடுத்தல் | ✓ | ✓ | ✓ |


| **கீழ்க்காணப்படும் மாணவர்களின் வாழ்க்கை அனுபவங்களைப் பயன்படுத்தி இந்நிலையில் கொடுக்கப்பட்டுள்ள அறிவு, திறன், பண்புகள் மற்றும் மனப்பான்மைகளைக் கற்பிக்கலாம்:** | | |
|---|---|---|
| **தொடக்கநிலை 1 - 2க்கான ஏற்ற சூழல்கள்** | **தொடக்கநிலை 3 - 4க்கான ஏற்ற சூழல்கள்** | **தொடக்கநிலை 5 - 6க்கான ஏற்ற சூழல்கள்** |
| “பண்புகளைச் செயலில் காட்டுவோம்” நடவடிக்கைகளில் ஈடுபடுதல்:<br>• படுக்கையைச் சரிபடுத்துதல்<br>• வீட்டிலுள்ளவர்களுக்கு வணக்கம் கூறுதல்<br>• படிக்கும் இடத்தைச் சுத்தப்படுத்துதல்<br>• உணவு உண்ட பின் மேசையைச் சுத்தப்படுத்துதல் | • வீட்டு வேலைகளில் உதவுதல்<br>• குடும்பத்தோடு நேரத்தைக் கழித்தல்<br>• சகோதரர்களுடன் ஒத்துப் போகுதல்<br>• வீட்டுக் கொண்டாட்டங்களின்போது உதவுதல் | • குடும்பத்தோடு நேரத்தைக் கழித்தல்<br>• குடும்பத்தினரைக் கவனித்துக்கொள்ளுதல்<br>• குடும்பத்தினரைச் சார்ந்த முக்கியக் கொண்டாட்டங்களைத் திட்டமிட்டுக் கொண்டாடுதல் |



RESTRICTED

**நிலை**: பள்ளி

**நோக்கம்**: நல்ல நட்புகளையும் குழு உணர்வையும் வளர்த்தல்




**<u>கற்றல் விளைவுகள்</u>**:

**1**: சுய விழிப்புணர்வைப் பெற்றுச் சுய நிர்வாகத் திறன்களைப் பயன்படுத்திச் சுய நலனையும் செயல்திறனையும் அடைதல்

**2**: நேர்மையுடன் நடந்துகொள்வதோடு அறநெறிக் கொள்கைகளை நிலைநாட்டும் விதத்தில் பொறுப்பான முடிவுகளை எடுத்தல்

**3**: சமூக விழிப்புணர்வைப் பெற்று மற்றவருடன் பழகவும் கருத்துப்பரிமாற்றம் செய்யவும் தேவையான திறன்களைப் பயன்படுத்தி நல்ல உறவுமுறைகளை அமைத்துக்கொண்டு அவற்றை நிலைநாட்டுதல்

**7**: மற்றவர்களிடம் பரிவு காட்டுவதோடு நமது சமூகம் மற்றும் தேசத்தின் வளர்ச்சிக்குத் துடிப்பான முறையில் பங்காற்றுதல்

**<u>மைய வினாக்கள்:</u>**

**அடையாளம்:** நான் எப்படிப்பட்ட நண்பனாக இருக்கிறேன்? குழு வேலையில் நமது பங்கு என்ன?

**உறவுகள்:** என் நண்பர்கள் யார்? நாம் எவ்வாறு சமூகமாக ஒன்று சேர்ந்து செயல்படுகிறோம்?

**தெரிவுகள்:** நான் நட்பிலிருந்து எதிர்பார்ப்பவை யாவை? ஒரு குழுவை உருவாக்குவதற்கு நமது வலிமையை எவ்வாறு பயன்படுத்தலாம்?

| பாடப்பொருள் | | தொடக்கநிலை | | |
|---|---|---|---|---|
| | | 1-2 | 3-4 | 5-6 |
| **அறிவு** | **நல்ல நட்புகள்**<br>• நட்புகளை ஏற்படுத்திக்கொள்ளும் வழிகளை அறிதல் | ✓ | | |
| | • நல்ல நட்புகள் என்றால் என்ன என்று தெரிந்துகொள்வதோடு அவற்றின் முக்கியத்துவத்தையும் அறிதல் | | ✓ | ✓ |
| | • நட்புகளில் பிரச்சினைகள் ஏற்படலாம் என்பதைத் தெரிந்துகொள்வதோடு அவற்றிற்குத் தீர்வு காணும் வழிகளையும் அறிதல் | | ✓ | ✓ |
| | **குழுவாகச் செயல்படுதல்**<br>• குழு வேலையில் ஈடுபடும்போது சிறப்பாகக் கருத்துப் பரிமாறிக்கொள்ள அறிதல்:<br>○ தன் முறை வந்தவுடன் பேசுதல் | ✓ | | |
| | ○ விதிமுறைகளின் அவசியத்தைப் புரிந்துகொள்ளுதல் | ✓ | | |
| | ○ மற்றவர்கள் பேசும்போது கவனத்துடன் கேட்டல் | ✓ | ✓ | |
| | ○ துடிப்புடன் பங்கெடுத்தல் | | ✓ | |
| | ○ தன்னுடைய கருத்தைத் தகுந்த முறையில் வெளிப்படுத்துதல் | | ✓ | ✓ |
| | ○ வேறுபட்ட கருத்துகளை மதித்தல் | | ✓ | ✓ |
| | • கருத்து வேறுபாடுகளைக் கையாளும் வழிமுறைகளை அறிதல்:<br>○ ஆசிரியர்களிடம் தெரிவித்தல் | ✓ | ✓ | |
| | ○ வேறுபட்ட கருத்துகளை மதிக்கும்படி குழு உறுப்பினர்களுக்கு நினைவுபடுத்துதல் | | ✓ | ✓ |
| | **மற்றவர்களின் மீது பரிவு காட்டுதல்**<br>• மற்றவர்கள் மீது பரிவு காட்டும் வழிகளை அறிதல் | ✓ | ✓ | ✓ |
| | • பள்ளி நண்பர்கள் மற்றும் இணைய நண்பர்களின் எண்ணங்களையும் உணர்வுகளையும் மதித்துக் கூருணர்வுடன் நடந்துகொள்ள அறிதல் | | ✓ | ✓ |
| | • மற்றவர்கள் மீது பரிவு காட்டுவதன் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ளுதல் | | ✓ | ✓ |



RESTRICTED

| பாடப்பொருள் | | தொடக்கநிலை | | |
|---|---|---|---|---|
| | | 1-2 | 3-4 | 5-6 |
| **அறிவு** | **எதிர்மறையான உறவுகள்**<br>• எதிர்மறையான உறவுகள் என்றால் என்ன என்று தெரிந்துகொள்வதோடு அவை எப்படி இருக்கும் என்றும் தெரிந்திருத்தல் | ✓ | ✓ | |
| | • ஒருவர் தன்மீது வைத்திருக்கும் மதிப்பையும் குழுப் பிணைப்பையும் எதிர்மறையான உறவுகள் பாதிக்கும் என்பதை அறிதல் | | ✓ | ✓ |
| | • எதிர்மறையான உறவுகளை எதிர்நோக்கும்போது எங்கே, எப்போது உதவி நாடலாம் என்பதை அறிதல் | ✓ | ✓ | ✓ |
| **திறன்கள்** | **உடன்பாடான உறவுகளை ஏற்படுத்தி அவற்றைக் கட்டிக்காத்தல்**<br>• மற்றவர்கள் கூறுவதைக் கவனத்துடன் கேட்டுத் தகுந்த முறையில் பதிலளித்தல் | ✓ | ✓ | |
| | • மற்றவரிடம் மரியாதையாகப் பேசுதல் | ✓ | ✓ | ✓ |
| | • மற்றவர் மீது பரிவும் அக்கறையும் காட்டுதல் | ✓ | ✓ | ✓ |
| | • பள்ளியிலுள்ள மற்றவர்களுக்கு முக்கியத்துவம் அளித்தல் | | ✓ | ✓ |
| | • மற்றவர்களின் உணர்வுகளை அவர்களின் மெய்ப்பாடு மூலம் அறிதல் | | ✓ | ✓ |
| | • விளக்கம் பெறுவதோடு தன்னுடைய எண்ணங்களையும் உணர்வுகளையும் தகுந்த முறையில் மற்றவர்களிடம் வெளிப்படுத்துதல் | | ✓ | ✓ |
| | • பள்ளியிலுள்ள மற்றவர்களுக்கு முதலிடம் கொடுத்தல் | | | ✓ |
| | **பிறர் நலன் கருதுதல்**<br>• மற்றவர்களின் எண்ணங்களையும் உணர்வுகளையும் கருத்தில்கொள்ளுதல் | ✓ | ✓ | ✓ |
| | • ஒரு சூழ்நிலையை ஒவ்வொருவரும் வெவ்வேறு விதத்தில் கையாளுவார்கள் என்பதை அறிதல் | | ✓ | ✓ |
| | • மற்றவர்களிடம் கூருணர்வுடன் நடந்துகொள்ளுதல் | | | ✓ |
| | **பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல்**<br>• மற்றவர்களுடன் ஏற்படும் கருத்து வேறுபாடுகளைக் கையாள ஏற்புடைய வழிமுறைகளைப் பின்பற்றுதல் | | ✓ | ✓ |

| பாடப்பொருள் | | தொடக்கநிலை | | |
|---|---|---|---|---|
| | | 1-2 | 3-4 | 5-6 |
| **திறன்கள்** | **உதவி நாடுதல்**<br>• சவால்களை எதிர்நோக்கும்போது மற்றவர்களிடம் உதவி நாடுதல் | ✓ | ✓ | ✓ |
| | **உதவி செய்தல்**<br>• சவால்களை எதிர்நோக்குபவர்களுக்கு உதவி செய்தல் | | ✓ | ✓ |
| | **பொறுப்புடன் முடிவெடுத்தல்**<br>• முடிவெடுப்பதற்கு முன் அதற்கான தெரிவுகளையும் அவற்றின் விளைவுகளையும் சீர்தூக்கிப் பார்த்தல் | ✓ | ✓ | ✓ |
| | • பண்புகளின் அடிப்படையில் முடிவுகளை எடுத்தல் | ✓ | ✓ | ✓ |
| | • ஒருவரின் செயல்கள் மற்றவர்களை எவ்வாறு பாதிக்கும் என்று மீள்நோக்குதல் | ✓ | ✓ | ✓ |
| | • சவால்களை எதிர்நோக்கினாலும் துணிவுடன் சரியானவற்றையே செய்தல் | ✓ | ✓ | ✓ |
| | **மீள்நோக்குதல்**<br>• பள்ளியில் மற்றவர்களுடன் கொண்ட அனுபவங்களைப்பற்றிச் சிந்தித்துப் பார்த்து அவற்றிலிருந்து கற்றுக்கொள்ளுதல் | ✓ | ✓ | ✓ |
| **பண்புகள்** | மற்றவர்களை **மதித்தல்** | ✓ | ✓ | ✓ |
| | முடிவெடுக்கும்போது **பொறுப்புணர்வுடன்** நடந்துகொள்ளுதல் | ✓ | ✓ | ✓ |
| | மற்றவர்களிடம் **பொறுப்புணர்வுடன்** நடந்துகொள்ளுதல் | | ✓ | ✓ |
| | சவால்களை எதிர்நோக்கும்போது உணர்வுபூர்வமான தைரியத்தின் மூலம் **மீளும்தன்மையை** வெளிக்காட்டுதல் | ✓ | ✓ | ✓ |
| | சரியான ஒன்றுக்காக **நேர்மையுடனும்** மனத் தைரியத்துடனும் துணிந்து நிற்பது | ✓ | ✓ | ✓ |
| | மற்றவர்களின் எண்ணங்களுக்கும் உணர்வுகளுக்கும் தேவைகளுக்கும் **பரிவு** காட்டுதல் | ✓ | ✓ | ✓ |
| | மற்றவர்களிடம் **நல்லிணக்கத்துடன்** நடந்துகொள்ளுதல் | ✓ | ✓ | ✓ |
| **மனப்பான்மைகள்** | மற்றவர்களின் எண்ணங்களையும் உணர்வுகளையும் தேவைகளையும் கவனத்தில் கொள்ளுதல் | ✓ | ✓ | ✓ |
| | மற்றவர்களிடம் காணப்படும் வேறுபாடுகளை அறிந்து முக்கியத்துவம் அளித்தல் | ✓ | ✓ | ✓ |

| பாடப்பொருள் | | தொடக்கநிலை | | |
|---|---|---|---|---|
| | | 1-2 | 3-4 | 5-6 |
| **மனப்பான்மைகள்** | மற்றவர்களின் நிலையிலிருந்து சிந்தித்துப் பார்த்தல் | ✓ | ✓ | ✓ |
| | மற்றவர்களிடம் தன்னடக்கத்துடன் உரையாடுதல் | ✓ | ✓ | ✓ |
| | தன்னால் பள்ளியில் நல்ல மாற்றத்தை உண்டாக்க முடியும் என்ற நம்பிக்கை கொண்டிருத்தல் | | ✓ | ✓ |
| | மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளுதலும் அவர்களுக்கு முதலிடம் கொடுத்தலும் | | ✓ | ✓ |
| | பள்ளியில் உள்ளவர்களின் வாழ்வை முன்னேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல் | | ✓ | ✓ |

| **கீழ்க்காணப்படும் மாணவர்களின் வாழ்க்கை அனுபவங்களைப் பயன்படுத்தி இந்நிலையில் கொடுக்கப்பட்டுள்ள அறிவு, திறன், பண்புகள் மற்றும் மனப்பான்மைகளைக் கற்பிக்கலாம்:** | | |
|---|---|---|
| **தொடக்கநிலை 1 - 2க்கான ஏற்ற சூழல்கள்** | **தொடக்கநிலை 3 - 4க்கான ஏற்ற சூழல்கள்** | **தொடக்கநிலை 5 - 6க்கான ஏற்ற சூழல்கள்** |
| • புதிய நண்பர்களைச் சந்தித்தல்<br>• கிண்டல், கேலி போன்றவற்றைச் சந்தித்தல்<br>• நண்பர்களுடன் உரையாடுதல்<br>• பள்ளி நிகழ்வுகளிலும் நடவடிக்கைகளிலும் பங்கெடுத்தல் | • நண்பர்களுக்கு உதவுதல்<br>• தலைவராக இருத்தல்<br>• கிண்டல், கேலி போன்றவற்றைச் சமாளித்தல்<br>• நண்பராக இருத்தல்<br>• சேர்ந்து வேலை செய்தல்<br>• புறப்பாட நடவடிக்கையில் பங்கெடுத்தல்<br>• “பண்புகளைச் செயலில் காட்டுவோம்” நடவடிக்கைகளில் ஈடுபடுதல்<br>• சக வயதினரின் வற்புறுத்தலை எதிர்நோக்குதல்<br>• நண்பர்களுடன் ஏற்படும் கருத்து | • சமூக ஊடகங்களின் மூலம் நட்புக் கொள்ளுதல்<br>• மற்றவர்களுடன் இணையத்தின் மூலம் உரையாடுதல்<br>• இணையத்தின் மூலம் ஏற்படும் வம்பு, தொல்லை, தொந்தரவுகள் போன்றவற்றைச் சமாளித்தல்<br>• தோல்விகளைச் சந்தித்தல்<br>• கற்றல் பயணங்களுக்குச் செல்லுதல்<br>• கீழ்த் தொடக்கநிலை மாணவர்களுக்கு உதாரணமாக இருத்தல்<br>• கீழ்த் தொடக்கநிலை மாணவர்களுக்குத் துணையாக இருத்தல் |



RESTRICTED

| கீழ்க்காணப்படும் மாணவர்களின் வாழ்க்கை அனுபவங்களைப் பயன்படுத்தி இந்நிலையில் கொடுக்கப்பட்டுள்ள அறிவு, திறன், பண்புகள் மற்றும் மனப்பான்மைகளைக் கற்பிக்கலாம்: | | |
|---|---|---|
| **தொடக்கநிலை 1 - 2க்கான ஏற்ற சூழல்கள்** | **தொடக்கநிலை 3 - 4க்கான ஏற்ற சூழல்கள்** | **தொடக்கநிலை 5 - 6க்கான ஏற்ற சூழல்கள்** |
| | வேறுபாடுகளைச் சந்தித்தல் | • பள்ளி நிகழ்வுகளுக்குத் திட்டமிட்டு ஏற்பாடு செய்தல் |

**நிலை**: சமூகம்
**நோக்கம்:** நம் சமூகத்தைப் புரிந்துகொண்டு அரவணைக்கும் சமுதாயத்தை உருவாக்குதல்


**<u>கற்றல் விளைவுகள்:</u>**

**6:** சிங்கப்பூரின் பலதரப்பட்ட சமூகக் கலாச்சாரங்களை மதித்துச், சமூகப் பிணைப்பையும் நல்லிணக்கத்தையும் மேம்படுத்துதல்

**7:** மற்றவர்களிடம் பரிவு காட்டுவதோடு நமது சமூகம் மற்றும் தேசத்தின் வளர்ச்சிக்குத் துடிப்பான முறையில் பங்காற்றுதல்

**<u>மைய வினாக்கள்:</u>**

**அடையாளம்**: நம்மைப் பொறுத்தவரையில் அரவணைக்கும் சமுதாயம் என்றால் என்ன?
**உறவுகள்**: நாம் அரவணைக்கும் சமுதாயத்தில் எவ்வாறு மற்றவர்களைப் புரிந்துகொண்டு அவர்களோடு கருத்துகளைப் பரிமாறிக்கொள்கிறோம்?
**தெரிவுகள்**: அரவணைக்கும் சமுதாயத்தை உருவாக்குவதில் நமது பங்கு என்ன?



| பாடப்பொருள் | | தொடக்கநிலை | | |
|---|---|---|---|---|
| | | 1-2 | 3-4 | 5-6 |
| **அறிவு** | **பாரம்பரியங்களும் பழக்கவழக்கங்களும்**<br>• சிங்கப்பூரிலுள்ள பாரம்பரிய விழாக்களின் சிறப்புகளைப் புரிந்துகொள்ளுதல் | ✓ | | |
| | • சிங்கப்பூரிலுள்ள சமய விழாக்கள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றிலுள்ள வேறுபாடுகளைப் புரிந்துகொள்ளுதல் | | ✓ | |
| | • சிங்கப்பூரிலுள்ள பல்வேறு உணவுப் பழக்கங்களையும் வெவ்வேறு மதத்தினரின் அறிவார்ந்த நூல்களைப் பற்றியும் புரிந்துகொள்ளுதல் | | | ✓ |
| | **சமூகப் பிணைப்பும் நல்லிணக்கமும்**<br>• சமூகப் பிணைப்பைப் பற்றியும் நல்லிணக்கத்தைப் பற்றியும் பின்வருமாறு புரிந்துகொள்வர்:<br>○ மற்றச் சமயம், பாரம்பரியம், நாடுகள் ஆகியவற்றைச் சேர்ந்த நண்பர்களுடன் பழகுதல் | ✓ | | |
| | ○ மற்றச் சமூக-கலாச்சாரப் பிரிவைச்[15] சேர்ந்த நண்பர்களுடன் கருத்துப் பரிமாற்றம் செய்தலும் பழகுதலும் | | ✓ | |
| | ○ மற்றச் சமூக-கலாச்சாரப் பிரிவைச் சேர்ந்தவர்களுடன் சிறந்த கற்றல் மற்றும் வாழ்க்கை முறையை ஏற்படுத்திக் கொள்வதன் முக்கியத்துவத்தை அறிதல் | | | ✓ |
| | ○ ஒவ்வொருவரின் கருத்துகளை மதிக்கும் பழக்கத்தைக் கொண்டிருத்தல் | ✓ | ✓ | ✓ |
| | • மற்ற இனத்தையும் பாரம்பரியத்தையும் சேர்ந்தவர்களுக்கு மரியாதை காட்டும் வழிமுறைகளை அறிதல் | ✓ | ✓ | ✓ |
| | • மற்றவர்களின் மீது பரிவு காட்டும் வழிகளையும் அவர்களின் வாழ்வை மேம்படுத்துவதற்கான வழிகளையும் அறிதல் | | | ✓ |
| | • சமூகத்தின் ஓர் உறுப்பினர் என்னும் முறையில் தனக்கு இருக்கும் பங்குகளையும் பொறுப்புகளையும் புரிந்துகொள்ளுதல் | | | ✓ |

[15] Diverse socio-cultural groups/ settings comprise other races, religions, cultures, nationalities and/or social status. These include international students and new citizens.



RESTRICTED

| பாடப்பொருள் | | தொடக்கநிலை | | |
|---|---|---|---|---|
| | | 1-2 | 3-4 | 5-6 |
| அறிவு | **சமூகத்திற்குப் பரிவு காட்டுதல்**<br>• பரிவு காட்டும் ஒருவர் பின்வருமாறு இருப்பார் என்று புரிந்துகொள்ளுதல்:<br>○ மற்றவர்களின் நல்வாழ்வில் அக்கறைகொள்ளுதல்<br>○ மற்றவர்களின் தேவைகளைப் புரிந்துகொள்வதற்காக அவர்களின் நிலையிலிருந்து சிந்தித்துப் பார்த்தல்<br>○ மற்றவர்களுக்கு உதவி செய்வதற்கு முயற்சிகள் எடுத்தல் | | | ✓ |
| | • சமூகத்திலுள்ள மற்றவர்களுக்குப் பரிவு காட்டுவதன் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ளுதல் | | | ✓ |
| திறன்கள் | **உடன்பாடான உறவுகளை ஏற்படுத்தி அவற்றைக் கட்டிக்காத்தல்**<br>• மற்றவர்களின் கருத்துகளைக் கவனத்துடன் கேட்டுத் தகுந்த முறையில் பதிலளித்தல் | ✓ | | |
| | • மற்ற இன மற்றும் பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்களிடம் பரிவும் அக்கறையும் காட்டுதல் | ✓ | | |
| | • மற்றச் சமூக-கலாச்சாரப் பிரிவைச் சேர்ந்தவர்களுடன் பகிர்ந்துகொள்ளுதல் | | ✓ | |
| | • மற்றவர்களின் உணர்வுகளை அவர்களின் மெய்ப்பாடு மூலம் அறிதல் | | ✓ | ✓ |
| | • விளக்கம் பெறுவதோடு தன்னுடைய எண்ணங்களையும் உணர்வுகளையும் தகுந்த முறையில் மற்றச் சமூக-கலாச்சாரப் பிரிவைச் சேர்ந்தவர்களிடம் வெளிப்படுத்துதல் | | ✓ | ✓ |
| | • தகுந்த வழிமுறைகளைப் பயன்படுத்தி மற்றச் சமூக-கலாச்சாரப் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு உதவி செய்தல் | | | ✓ |
| | **பிறர் நலன் கருதுதல்**<br>• மற்றச் சமூக-கலாச்சாரப் பிரிவைச் சேர்ந்த நண்பர்களின் எண்ணங்களையும் உணர்வுகளையும் நடத்தையையும் அவர்களின் நிலையிலிருந்து சிந்தித்துப் பார்த்துக் கூருணர்வுடன் நடந்துகொள்ளுதல் | ✓ | ✓ | ✓ |
| | • மற்றவர்களின் பலங்களை அடையாளங்காணுதல் | | | ✓ |
| | **மீள்நோக்குதல்**<br>• சமுதாயத்தில் பெற்ற அனுபவங்களைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்துக் கற்றுக்கொள்ளுதல் | ✓ | ✓ | ✓ |




RESTRICTED

| பாடப்பொருள் | | தொடக்கநிலை | | |
|---|---|---|---|---|
| | | **1-2** | **3-4** | **5-6** |
| **பண்புகள்** | பின்வருவனவற்றுக்கு **மரியாதை** காட்டுதல்:<br>• சிங்கப்பூரிலுள்ள வேறுபட்ட உணவு வகைகளுக்கும் பாரம்பரிய விழாக்களுக்கும் | ✓ | | |
| | • சிங்கப்பூரிலுள்ள சமய விழாக்களுக்கும் வழிபாட்டு இடங்களுக்கும் | | ✓ | |
| | • உணவுப் பழக்கங்களுக்கும் வெவ்வேறு சமூகப் பாரம்பரிய குழுவினரின் அறிவார்ந்த நூல்களுக்கும் | | | ✓ |
| | மற்றவர்களின் எண்ணங்களுக்கும் தேவைகளுக்கும் **பரிவு** காட்டுதல் | ✓ | ✓ | ✓ |
| | மற்றவர்களுடன் **நல்லிணக்கத்துடன்** பழகுதல் | ✓ | ✓ | ✓ |
| **மனப்பான்மைகள்** | நடுநிலையாக இருத்தல் | ✓ | ✓ | ✓ |
| | சிங்கப்பூரின் பலதரப்பட்ட வேற்றுமைகளை மதித்துப் பாராட்டுதல் | ✓ | ✓ | ✓ |
| | மற்றவர்களின் நிலையிலிருந்து சிந்தித்துப் பார்த்தல் | ✓ | ✓ | ✓ |
| | மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளுதலும் அவர்களுக்கு முதலிடம் கொடுத்தலும் | | ✓ | ✓ |
| | மற்றவர்களிடம் வேறுபாடுகள் இருந்தாலும் அவர்களுக்கு முக்கியத்துவம் அளித்தல் | | ✓ | ✓ |
| | தன்னடக்கத்துடன் மற்றவர்களுடன் உரையாடுதல் | | | ✓ |
| | தன்னால் நல்ல மாற்றத்தை உண்டாக்க முடியும் என்ற நம்பிக்கை கொண்டிருத்தல் | | | ✓ |
| | மற்றவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு முயற்சிகள் எடுத்தல் | | | ✓ |

| கீழ்க்காணப்படும் மாணவர்களின் வாழ்க்கை அனுபவங்களைப் பயன்படுத்தி இந்நிலையில் கொடுக்கப்பட்டுள்ள அறிவு, திறன், பண்புகள் மற்றும் மனப்பான்மைகளைக் கற்பிக்கலாம்: | | |
|---|---|---|
| **தொடக்கநிலை 1 - 2க்கு ஏற்ற சூழல்கள்** | **தொடக்கநிலை 3 - 4க்கு ஏற்ற சூழல்கள்** | **தொடக்கநிலை 5 - 6க்கு ஏற்ற சூழல்கள்** |
| • மற்ற இனத்தைச் சேர்ந்த நண்பர்களுடன் உரையாடுதல்<br>• இன நல்லிணக்கத் தினத்தில் பங்கெடுத்தல் | • சமுதாயத்தில் வேறுபட்டு இருப்போரைச் சந்தித்தல்<br>• கற்றல் பயணங்களுக்குச் செல்லுதல்<br>• இன நல்லிணக்கத் தினத்தில் பங்கெடுத்தல் | • “பண்புகளைச் செயலில் காட்டுவோம்” நடவடிக்கைகளில் ஈடுபடுதல். இது சுற்றுச் சூழலுக்கும் மிருகங்களுக்கும் பரிவு காட்டுதலை உள்ளடக்கும்.<br>• கற்றல் பயணங்களுக்குச் செல்லுதல்<br>• இன நல்லிணக்கத் தினத்தில் பங்கெடுத்தல் |

**நிலை** : தேசம்

**நோக்கம்** : தேசிய அடையாள உணர்வை வளர்த்தலும் தேசிய முன்னேற்றத்திற்குப் பங்களித்தலும்




**<u>கற்றல் விளைவுகள்:</u>**

**5**: நமது தேசிய அடையாளத்தின் மீது பெருமையும் சிங்கப்பூரின் மீது பற்றும் தேசத்தை முன்னேற்றுவதற்குக் கடப்பாடும் கொண்டிருத்தல்

**8**: சமூக, தேச, உலக நடப்புகளைப் பற்றி அறிந்த பொறுப்புள்ள குடிமகனாக, அவற்றைப் பற்றி மீள்நோக்கம் செய்து ஏற்புடைய முறையில் நடந்துகொள்ளுதல்

**<u>மைய வினாக்கள்:</u>**

**அடையாளம்:** நம்மை எவை சிங்கப்பூரர்களாக அடையாளம் காட்டுகின்றன?

**உறவுகள்:** நான் மற்றவர்களோடு கொண்டிருக்கும் உறவுகள் எவ்வாறு தேசிய வளர்ச்சிக்கு உதவுகின்றன?

**தெரிவுகள்:** நாம் சிங்கப்பூரின் நலனில் கொண்டுள்ள அக்கறையை எவ்வாறு வெளிக்காட்டலாம்?



RESTRICTED

| பாடப்பொருள் | | தொடக்கநிலை | | |
|---|---|---|---|---|
| | | 1-2 | 3-4 | 5-6 |
| **அறிவு** | **தேசிய அடையாளம்**<br>• சிங்கப்பூரின் மரபையும் கலாச்சாரத்தையும் தெரிந்துகொள்வதோடு அவை எவ்வாறு நமது வாழ்க்கை முறையைத் தனித்துவம் மிக்கதாக ஆக்குகின்றன என்பதையும் அறிதல் | ✓ | | |
| | • தேசிய அடையாளத்தைப் புரிந்துகொள்ளுதல்:<br>○ சிங்கப்பூரின் மரபையும் கலாச்சாரத்தையும் தெரிந்துகொள்வதோடு அவை எவ்வாறு நமது வாழ்க்கை முறையைத் தனித்துவம் மிக்கதாக ஆக்குகின்றன என்பதைப் பற்றி அறிவதை உள்ளடக்கும் | | ✓ | ✓ |
| | ○ தேசப்பற்றை உருவாக்கி அது மிக முக்கியம் என்பதை அறிந்திருத்தல் | | ✓ | ✓ |
| | ○ அது சிங்கப்பூரரின் பாரம்பரியத்தை வழிநடத்தும் என்று அறிந்திருத்தல் | | | ✓ |
| | • தேசிய அடையாளத்தையும் கலாச்சாரத்தையும் உருவாக்க ஒருவர் எவ்வாறு பங்களிக்கலாம் என்று அறிதல்<br>○ பலதரப்பட்ட கலாச்சாரங்களை மதித்தல் | ✓ | | |
| | • ஒருவர் எவ்வாறு தேசிய அடையாளத்தையும் கலாச்சாரத்தையும் உருவாக்குவதற்குப் பங்களிக்கலாம் என்று புரிந்துகொள்ளுதல்:<br>○ பலதரப்பட்ட கலாச்சாரங்களை மதித்தல் | | ✓ | ✓ |
| | ○ மற்றக் கலாச்சாரங்களை மதித்துப் பாராட்டி ஏற்றுக்கொள்ளுதல் | | | ✓ |
| | **தேசிய வளர்ச்சிக்குப் பங்களித்தல்**<br>• சிங்கப்பூரின் முழுமைத் தற்காப்பின் ஐந்து கூறுகளைப் பற்றி அறிதல் | ✓ | | |
| | • ஒருவர் எவ்வாறு சிங்கப்பூரின் முழுமைத் தற்காப்பின் மீது கொண்டுள்ள கடப்பாட்டை வெளிப்படுத்துவது என்றும் எப்படித் தம் பங்கை ஆற்றுவது என்றும் புரிந்துகொள்ளுதல் | | ✓ | ✓ |
| | • சிங்கப்பூரின் நடப்பு விவகாரங்களைப் பற்றியும் அவற்றின் பின்விளைவுகளைப் பற்றியும் அறிதல் | | | ✓ |



RESTRICTED

| பாடப்பொருள் | | தொடக்கநிலை | | |
|---|---|---|---|---|
| | | 1-2 | 3-4 | 5-6 |
| **திறன்கள்** | **பிறர் நலன் கருதுதல்**<br>• மற்றவர்களின் எண்ணங்களையும் உணர்வுகளையும் கருத்தில்கொள்ளுதல்<br>○ சம வயதினரிடையே | ✓ | | |
| | ○ பள்ளியில் | | ✓ | |
| | ○ சமூகத்திலும் தேசத்திலும் | | | ✓ |
| | **பொறுப்புடன் முடிவெடுத்தல்**<br>• முடிவெடுப்பதற்கு முன் அதற்கான தெரிவுகளையும் அவற்றின் விளைவுகளையும் சீர்தூக்கிப் பார்த்தல் | ✓ | ✓ | ✓ |
| | • பண்புகளின் அடிப்படையில் முடிவுகளை எடுத்தல் | ✓ | ✓ | ✓ |
| | • ஒருவரின் செயல்கள் மற்றவர்களை எவ்வாறு பாதிக்கும் என்று மீள்நோக்குதல் | ✓ | ✓ | ✓ |
| | • சவால்களை எதிர்நோக்கினாலும் துணிவுடன் சரியானவற்றையே செய்தல் | | ✓ | ✓ |
| | **மீள்நோக்குதல்**<br>• சிங்கப்பூர் பெற்ற அனுபவங்களைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்து அவற்றிலிருந்து கற்றுக்கொள்ளுதல் | | | ✓ |
| | • தனது அனுபவங்கள் எவ்வாறு தனக்குச் சிங்கப்பூரின் மீது பற்றை உருவாக்குகின்றது என்பதை மீள்நோக்கம் செய்தல் | ✓ | | |
| | • தனது அனுபவங்கள் எவ்வாறு தன்னைச் சிங்கப்பூரைப் பற்றிப் பெருமை அடையச் செய்வதோடு சிங்கப்பூரின் மீது கடப்பாடும் கொண்டிருக்க உதவுகின்றது என்பதை மீள்நோக்கம் செய்தல் | | ✓ | ✓ |
| **பண்புகள்** | சிங்கப்பூர் மீது **பரிவு** காட்டுதல் | ✓ | ✓ | ✓ |
| | சிங்கப்பூர் மீது பற்றுடன் இருத்தல் | ✓ | ✓ | ✓ |
| | சிங்கப்பூர் மீது **பொறுப்புடன்** நடந்துகொள்ளுதல் | ✓ | ✓ | ✓ |
| | நமது தேசிய அடையாளத்தை **மதித்தல்** | ✓ | ✓ | ✓ |
| | தேசிய நடப்புகளைப் பற்றி அறிந்திருப்பதன் மூலம் **குடிமைப் பொறுப்புணர்வுடன்** இருத்தல் | | ✓ | ✓ |



RESTRICTED


| பாடப்பொருள் | | தொடக்கநிலை | | |
|---|---|---|---|---|
| | | 1-2 | 3-4 | 5-6 |
| **பண்புகள்** | சிங்கப்பூரின் குடிமைத் தற்காப்பிற்காக **மீளும்தன்மையுடன்** இருத்தல் | | | ✓ |
| **மனப்பான்மைகள்** | சிங்கப்பூர் மீது பற்றுடன் இருத்தல் | ✓ | ✓ | ✓ |
| | சிங்கப்பூரை நேசித்தல் | ✓ | ✓ | ✓ |
| | சிங்கப்பூரின் எதிர்காலத்தைப் பற்றி நம்பிக்கையுடன் இருத்தல் | ✓ | ✓ | ✓ |
| | சிங்கப்பூரைப் பாதிக்கக்கூடிய விவகாரங்களின் மீது அக்கறை காட்டுதல் | | ✓ | ✓ |
| | சிங்கப்பூரின் நல்வாழ்வின்மீது கடப்பாடு கொண்டிருத்தல் | | | ✓ |
| | தகவல்களை அறிய முனைப்புடன் செயல்படுதல் | | | ✓ |

| **கீழ்க்காணப்படும் மாணவர்களின் வாழ்க்கை அனுபவங்களைப் பயன்படுத்தி இந்நிலையில் கொடுக்கப்பட்டுள்ள அறிவு, திறன், பண்புகள் மற்றும் மனப்பான்மைகளைக் கற்பிக்கலாம்:** | | |
|---|---|---|
| **தொடக்கநிலை 1 - 2க்கு ஏற்ற சூழல்கள்** | **தொடக்கநிலை 3 - 4க்கு ஏற்ற சூழல்கள்** | **தொடக்கநிலை 5 - 6க்கு ஏற்ற சூழல்கள்** |
| • கொடி வணக்கம் செலுத்தும் நிகழ்வில் பங்கெடுத்தல்<br>• முழுமைத் தற்காப்புத் தினத்தை நினைவில் வைத்திருத்தல்<br>• தேசியத் தினத்தைக் கொண்டாடுதல் | • முழுமைத் தற்காப்புத் தினத்தை நினைவில் வைத்திருத்தல்<br>• தேசியத் தினத்தைக் கொண்டாடுதல் | • முழுமைத் தற்காப்புத் தினத்தை நினைவில் வைத்திருத்தல்<br>• தேசியக் கல்வி நிகழ்ச்சியைப் பார்க்கச் செல்லுதல்<br>• தேசிய தினத்தைக் கொண்டாடுதல்<br>• உள்நாட்டு / வெளிநாட்டுக் கற்றல் பயணங்களில் பங்கெடுத்தல் |



RESTRICTED

**நிலை:** உலகம்*
**நோக்கம்:** மாறிவரும் உலகத்தில் துடிப்புமிக்க குடிமகனாக இருத்தல்
*இந்த நிலை தொடக்கநிலை 5 - 6க்கு மட்டுமே தொடர்புடையதும் ஏற்புடையதும் ஆகும்.




**<u>கற்றல் விளைவுகள்:</u>**

**8**: சமூக, தேச, உலக நடப்புகளைப் பற்றி அறிந்த பொறுப்புள்ள குடிமகனாக, அவற்றைப் பற்றி மீள்நோக்கம் செய்து ஏற்புடைய முறையில் நடந்துகொள்ளுதல்

**<u>மைய வினாக்கள்:</u>**
**அடையாளம்**: மாறிவரும் உலகத்தில் துடிப்புமிக்க குடிமகனாக இருப்பது என்றால் என்ன?
**உறவுகள்**: நாம் மாறிவரும் உலகத்தில் எப்படி மற்றவர்களோடு கருத்துப் பரிமாற்றம் செய்கிறோம்?
**தெரிவுகள்**: நாம் மாறிவரும் உலகத்தின் தேவைகளுக்கேற்ப எவ்வாறு நம் பலங்களையும் திறன்களையும் பயன்படுத்தலாம்?

| பாடப்பொருள் | | தொடக்கநிலை |
|---|---|---|
| | | 5-6 |
| **அறிவு** | **துடிப்புமிக்க குடிமகன்**<br>• மாறிவரும் உலகத்தில் உலகச் செய்திகளை அறிந்த பொறுப்பான குடிமகனின் குணநலன்களை அறிதல்<br>• சிங்கப்பூரில் தனது பங்கை அறிதல்<br>• சிங்கப்பூரைச் சுற்றியுள்ள நாடுகள் சந்திக்கும் சிக்கல்களைப் பற்றி அறிய ஆர்வம் காட்டுதலும் அவற்றின் தாக்கங்களின் மீது அக்கறை காட்டுதலும் | ✓ |
| **திறன்கள்** | **பிறர் நலன் கருதுதல்**<br>• பல கண்ணோட்டங்களைக் கருத்தில் கொண்டும் பண்புகளை அடிப்படையாகக் கொண்டும் முடிவெடுத்தல் | ✓ |

| பாடப்பொருள் | | தொடக்கநிலை 5-6 |
|---|---|---|
| **திறன்கள்** | **உதவி அளித்தல்**<br>• சவால்களைச் சந்திப்பவர்களுக்கு உதவியளித்தல் | ✓ |
| | **மீள்நோக்குதல்**<br>• சிங்கப்பூரைச் சுற்றியுள்ள நாடுகளின் அனுபவங்களை மீள்நோக்கம் செய்து பார்த்து அதிலிருந்து கற்றுக்கொள்ளுதல் | ✓ |
| **பண்புகள்** | மற்றவர்களிடம் **மரியாதை** காட்டுதல் | ✓ |
| | **பொறுப்புடன்** மற்றவர்களுக்கு உதவுதல் | ✓ |
| | மற்றவர்களின் எண்ணங்களுக்கும் உணர்வுகளுக்கும் தேவைகளுக்கும் **பரிவு** காட்டுதல் | ✓ |
| **மனப்பான்மைகள்** | மற்றவர்களின் நிலையிலிருந்து சிந்தித்தல் | ✓ |
| | உலகத்தைப் பாதிக்கும் நிகழ்வுகளைப் பற்றிச் சிந்தித்தல் | ✓ |
| | உலகத்தைப் பற்றிய தகவல்களை அறிய முனைப்புடன் செயல்படுதல் | ✓ |

| **கீழ்க்காணப்படும் மாணவர்களின் வாழ்க்கை அனுபவங்களைப் பயன்படுத்தி இந்நிலையில் கொடுக்கப்பட்டுள்ள அறிவு, திறன், பண்புகள் மற்றும் மனப்பான்மைகளைக் கற்பிக்கலாம்:** |
|---|
| **தொடக்கநிலை 5 - 6க்கு ஏற்ற சூழல்கள்** |
| • அனைத்துலக நட்பு நாளைக் கொண்டாடுதல்<br>• "பண்புகளைச் செயலில் காட்டுவோம்" நடவடிக்கைகளில் ஈடுபடுதலும் அவற்றின் மூலம் மற்றவரை மதித்துப் பாராட்டுதலும்<br>• உள்நாட்டு / வெளிநாட்டுக் கற்றல் பயணங்களில் பங்கெடுத்தல் |

**கற்பித்தல் அணுகுமுறைகள்**

நற்குணம் மற்றும் குடியியல் கல்வி கற்பித்தல் அணுகுமுறை கட்டமைத்தல் (Constructivist) கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டது. நற்குணம் மற்றும் குடியியல் கல்வி கற்பிப்பதற்குச் செயல்முறை சார்ந்த அணுகுமுறைகள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த அணுகுமுறைகள், "எதைக் கற்பிக்க வேண்டும்?" என்பதற்கு முக்கியத்துவம் கொடுக்காமல், **"ஏன் இவற்றைக் கற்க வேண்டும்?"** மற்றும் **"எப்படி இவற்றைக் கற்பிக்கலாம்?"** ஆகிய கேள்விகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன. மாணவர்கள் திறன்களைக் கற்றுக்கொள்வதற்கும் பண்புகளை நன்கு புரிந்து உள்வாங்கிக்கொள்வதற்கும் இந்தக் கற்பித்தல் அணுகுமுறைகள் வழிவகுக்கின்றன. இப்பண்புகளையும் திறன்களையும் மாணவர்கள் செயல்வழியும் மீள்நோக்கத்தின் வழியும் கற்றுக்கொள்கின்றனர்.

ஆசிரியர்கள் பாடத்திற்கேற்பப் பலதரப்பட்ட செயல்முறை சார்ந்த அணுகுமுறைகளைப் பயன்படுத்தலாம். அவ்வாறு செய்யும்போது மாணவர்களைக் கவரும் வண்ணம் அவர்களுக்கு ஏற்ற கற்பித்தல் உத்திகளைத் தேர்ந்தெடுத்தல் அவசியமாகும். கற்பித்தல் அணுகுமுறைகளைப் பற்றிய விவரங்கள் அடுத்த பக்கத்தில் விவரிக்கப்பட்டுள்ளன.

**படம் 9: நற்குணம் மற்றும் குடியியல் கல்வியின் கற்பித்தல் அணுகுமுறை**

செயல்முறை சார்ந்த அணுகுமுறைகள்

- கதை சொல்லும் அணுகுமுறை
- பிறர் நலன் கருதும் அணுகுமுறை
- அனுபவம் வழிக் கற்றல் அணுகுமுறை
- பகுத்துணர் திறன் வளர்க்கும் அணுகுமுறை
- மாற்றம் செய்யப்பட்ட நன்னெறித் துலக்கும் அணுகுமுறை

ஒரு செயல்முறை சார்ந்த அணுகுமுறையில் பல கற்பித்தல் உத்திகள் அடங்கியுள்ளன. அவற்றுள் சில கீழ்க் கொடுக்கப்பட்டுள்ளன:

- பாத்திரமேற்று நடித்தல் (Role-playing)
- உரையாடுதல் (Dialoguing)
- கூடிக் கற்றல் (Cooperative Learning)
- மீள்நோக்குதல் (Reflection)
- தெளிவுபடுத்துதல், சிந்தனையைத் தூண்டி விளைவையும் யோசிக்க வைத்தல், வழிகாட்டுதல் என்னும் கேள்வி கேட்கும் உத்தி (Clarify, Sensitise, Influence (CSI) questioning process)
- சிந்தித்தல் வழக்கமுறைகள் (Thinking Routines)
- குழு வேலை (Group Work)
- வட்டச் செயல்முறைகள் (Circle Processes)

### 1. கதை சொல்லும் அணுகுமுறை

கதை சொல்லும் அணுகுமுறையில் கற்பனைக் கதைகளையும் உண்மைக் கதைகளையும் பயன்படுத்திப் பண்புகளைக் கற்பிக்கலாம். ஆசிரியர்கள் பண்பாட்டுக் கதைகள், வீரர்களைப் பற்றிய கதைகள், அன்றாட வாழ்க்கையையொட்டிய கதைகள் எனப் பலதரப்பட்ட கதைகளைப் பயன்படுத்தலாம். இக்கதைகளின் மூலம் மாணவர்கள் பண்புகளின் முக்கியத்துவத்தை அறிந்துகொள்வதோடு தங்கள் உணர்வுகளையும் தெளிவுபடுத்திக்கொள்வார்கள். மாணவர்களின் வயதுக்கும் ஆர்வத்துக்கும் பொருத்தமாக உள்ள கதைகளைத் தேர்ந்தெடுப்பது முக்கியமாகும்.

மாணவர்கள் தங்களின் சொந்த அனுபவங்களைக் கூறுதல், சொந்தக் கதைகளை உருவாக்குதல், மற்றொருவரின் கதையைக் கேட்டல் ஆகியவற்றின் மூலம் தங்கள் சொந்த நம்பிக்கைகளையும் பண்புகளையும் அடையாளங்காண்பார்கள். இந்த அணுகுமுறை மாணவர்கள் சுயவிடை கேள்விகள் கேட்கவும் சுருக்கிக்கூறவும் ஒவ்வொருவரின் பங்களிப்பை வலுப்படுத்தவும் ஒருவருக்கொருவர் கருத்துரைத்தலை ஊக்குவிக்கவும் வகை செய்கிறது.

### 2. பிறர் நலன் கருதும் அணுகுமுறை

மாணவர்கள் மற்றவர்களின் மீது பரிவு கொண்டு அவர்களின் நிலையைப் புரிந்துகொள்ளப் பிறர் நலன் கருதும் அணுகுமுறை உதவும். இந்த அணுகுமுறையில், “இச்சூழ்நிலையில் நீங்கள் இருந்தால் உங்களுக்கு எப்படி இருக்கும்?” என்னும் மையக் கேள்வியைக் கேட்பது அவசியமாகும். இந்த அணுகுமுறையின் மூலம் மாணவர்கள், தாம் எடுக்கும் அறநெறிச் சார்ந்த முடிவுகள் மற்றவர்களையும் பாதிக்கலாம் என்பதைக் கற்பார்கள். மற்றவர்களின் சூழ்நிலையிலிருந்து சிந்தித்துப் பார்க்கும்போது மாணவர்களால் மற்றவர்களின் எண்ணங்களையும் உணர்வுகளையும் புரிந்துகொள்ள முடிகிறது. இதனால் அவர்களால் ஒரு சூழ்நிலையைப் பாரபட்சமில்லாத கண்ணோட்டத்துடன் காண முடியும். இத்தகைய திறனை மாணவர்களுக்குக் கற்பிப்பதற்குப் பாத்திரமேற்று நடித்தல், கேள்விகள் கேட்டல் போன்ற உத்திகளை ஆசிரியர்கள் பயன்படுத்தலாம்.

### 3. அனுபவம் வழிக் கற்றல் அணுகுமுறை

அனுபவம் வழிக் கற்றல் அணுகுமுறையில் மாணவர்களுக்கு வகுப்பறையின் உள்ளும் வெளியிலும் கற்றலுக்கு ஏற்ற அனுபவங்களை ஆசிரியர்கள் ஏற்படுத்தித் தருவது அவசியம். இந்த அனுபவங்களும் தலங்களும் மாணவர்கள் தாங்கள் கொண்டுள்ள பண்புகள், கொள்கைகள், கருத்துகள் பற்றிச் சிந்திக்கத் தூண்டும்.

இந்த அணுகுமுறையில் பின்வரும் படிநிலைகள் உள்ளன:

- மாணவர்கள் ஓர் அனுபவத்தில் / ஒரு செயலில் ஈடுபடுவர்
- அந்த அனுபவத்தை / செயலைக் கூர்ந்து கவனிப்பர்
- அவர்கள் ஈடுபட்ட அனுபவத்தை / செயலைப் பற்றி மீள்நோக்கம் செய்வர்
- அவர்கள் அனுபவத்தின் / செயலின் மூலம் கற்றுக் கொண்டதை மீண்டும் சிறப்பான முறையில் செயல்படுத்துவர்

எனவே, உண்மை உலகச் சூழலில் மாணவர்கள் கற்றுக் கொண்ட திறன்கள், பெற்ற அறிவு ஆகியவற்றின் மூலம் பண்புகளின் முக்கியத்துவத்தை மேலும் புரிந்துகொள்கிறார்கள். இப்பண்புகளைச் செயலிலும் காட்டுவார்கள். அதோடு மாணவர்கள் தங்கள் வாழ்க்கையில் எடுக்கும் பல முடிவுகளுக்கு இப்பண்புகள் வழிகாட்டியாக அமையும்.

ஒரு செயலைச் செய்யும் போது மாணவர்கள் தாம் முன்பு பெற்ற அனுபவங்கள் அவர்களுக்கு உறுதுணையாக இருக்கும். அவர்கள் சிலவற்றைச் சுயமாகவும் கற்பார்கள். இதன் வாயிலாக மாணவர்கள் தமது கற்றலில் அதிகம் பொறுப்பேற்பதுடன் தாம் கற்றதை மற்றச் சூழ்நிலைகளிலும் பயன்படுத்துவார்கள்.

### 4. பகுத்துணர் திறன் வளர்க்கும் அணுகுமுறை

பகுத்துணர் திறன் வளர்க்கும் அணுகுமுறை, கோல்பெர்க் (Kohlberg) எனும் அறிஞரின் அறநெறி வளர்ச்சிக் கோட்பாடு (Theory of Moral Development) முறையை அடிப்படையாகக் கொண்டது. இந்த அணுகுமுறையில் உண்மையான அல்லது அனுமான அறநெறிச் சார்ந்த இக்கட்டான சூழலில் (hypothetical moral dilemma situations) மாணவர்கள் எத்தகைய முடிவை எடுப்பார்கள் என்று கேட்டறிந்து அந்த முடிவுகளைக் கோல்பெர்க்கின் பகுத்துணர் திறன் வளர்க்கும் படிநிலைகளுக்கு ஏற்ப வரிசைப்படுத்துவர்.

இவ்வாறு செய்வதனால் மாணவர்களால் தங்களின் முடிவுகளுக்குப் பின்னால் இருக்கும் நோக்கங்களை ஆராய்ந்து பார்க்க முடிகிறது. மேலும், இது அவர்களின் சுய விழிப்புணர்வையும் மேம்படுத்துகிறது.

மாணவர்களின் பகுத்துணர் திறனை மேம்படுத்துவதற்கு ஆசிரியர்கள் தெளிவுபடுத்துதல், சிந்தனையைத் தூண்டுதல், வழிகாட்டுதல் என்னும் கேள்விக் கேட்கும் உத்தியைப் பயன்படுத்தலாம். இது மாணவர்களைத் தன்னலமுள்ள கண்ணோட்டத்திலிருந்து சமூக மற்றும் உலகக் கண்ணோட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவுகிறது.

## 5. மாற்றம் செய்யப்பட்ட நன்னெறித் துலக்கும் அணுகுமுறை

மாற்றம் செய்யப்பட்ட நன்னெறித் துலக்கும் அணுகுமுறை, மாணவர்கள் எந்தச் சூழ்நிலையையும் நன்கு சீர்தூக்கிப் பார்த்துப் படிப்படியாகவும் பொறுப்புடனும் முடிவுகளை எடுப்பதற்கு உதவுகிறது. மேலும், இந்த அணுகுமுறையில் பகுத்தாய்வுச் சிந்தனை, மற்றவரின் மீது பரிவுகொள்ளுதல், உணர்வுபூர்வமான விழிப்புணர்வு ஆகியவற்றைப் பயன்படுத்தி மாணவர்கள் தங்களின் தனிப்பட்ட உணர்வுகளையும் நடத்தையையும் ஆராய்ந்து பார்க்க ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

சமுதாயத்தால் கட்டிக்காக்கப்படும் பண்புகளின் அடிப்படையில் மாணவர்கள் முடிவெடுப்பதற்கு ஆசிரியர்கள் உரையாடல், கூடிக் கற்றல் போன்ற உத்திகளைப் பயன்படுத்தலாம். பொறுப்புடன் முடிவெடுத்தல் முறையில் பின்வரும் படிநிலைகள் உள்ளன:

- தெரிவுகளை அடையாளங்காணுதல்
- தெரிவுகளை மதிப்பிடுதல்
- முடிவெடுத்தல்
- தன் முடிவை உறுதிபடுத்துதல்
- தன் திடநம்பிக்கைகளுக்கு இணங்க வாழுதல்

## மதிப்பீடு

மதிப்பீடு என்பது கற்றல் கற்பித்தலின் ஒரு முக்கியக் கூறாக விளங்குகிறது. மதிப்பீட்டைச் சரியான முறையில் பயன்படுத்தினால் அது மாணவர்களின் முழுமையான வளர்ச்சிக்கு வழிவகுக்கும். நற்குணம் மற்றும் குடியியல் கல்வியில் உள்ள மதிப்பீட்டைப் பற்றிப் படம் 10 விளக்குகின்றது.

## மதிப்பீட்டின் பங்கு

நற்குணம் மற்றும் குடியியல் கல்வியில் மதிப்பீடு முக்கிய பங்காற்றுகிறது. மாணவர்களைத் தம் கற்றலில் ஈடுபாட்டுடன் இருக்கவும் மதிப்பீட்டு முறையில் அதிகப் பங்கு வகிக்கவும் கட்டமைத்தல் கோட்பாடுகள் வழிவகுக்கின்றன. ஆகையால், இப்பாடத்திட்டத்தில் கற்றலுக்கான மதிப்பீட்டுக்கு (Assessment for Learning) முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. மாணவர் அடைந்துள்ள தேர்ச்சியைப் பற்றிய தகவல்களை முழுமையாகவும் உரிய காலத்தோடும் அறிவித்தல் அவசியம். இவ்வாறு செய்வது மாணவர்களை மேலும் முனைப்புடன் கற்க ஊக்குவிப்பதோடு அவர்களின் கற்றல் இலக்குகளை அடையவும் உதவும்.

## மதிப்பிடப்படும் கூறுகள்

நற்குணம் மற்றும் குடியியல் கல்வியில் கீழ்க்கொடுக்கப்பட்டுள்ள கூறுகள் மதிப்பிடப்படும்:

- பண்புகளைப் பற்றிய மாணவர்களின் புரிந்துணர்வு
- சமூக மனவுணர்வு சார்ந்த திறன்களின் வளர்ச்சி
- குடியியல் சார்ந்த திறன்கள்

## மதிப்பீட்டு அணுகுமுறை

மாணவர்களின் முடிவெடுக்கும் ஆற்றலை அடிப்படையாகக் கொண்டே நற்குணம் மற்றும் குடியியல் கல்வியில் கற்றல் மதிப்பிடப்படுகிறது. வாழ்க்கைக்கு உகந்த மதிப்பீட்டுப் பணிகளின்போது பல்வேறு மதிப்பீட்டு உத்திகளைப் பயன்படுத்தி மாணவர்களின் ஆர்வத்தை அதிகரிப்பதோடு ஆழமான கற்றலுக்கும் வழிவகுக்கலாம்.

சுய மதிப்பீடு, சக மாணவர் மதிப்பீடு ஆகியவற்றில் பங்கெடுப்பதன் மூலம் மாணவர்களால் தங்கள் கற்றலை மேம்படுத்திக்கொள்ள முடியும். அவர்கள் தாங்கள் செய்யும் வேலைகளையும் அடைந்துள்ள மேம்பாட்டையும் கண்காணிப்பதோடு தங்கள் கற்றல் இலக்குகளையும் அமைத்துக்கொள்ள வேண்டும். மாணவர்கள் மதிப்பீட்டு நடவடிக்கையையும் அதன் எதிர்பார்ப்புகளையும் புரிந்துகொள்ள வேண்டும்.

ஆகையால் ஒவ்வொரு மதிப்பீட்டு நடவடிக்கையும் அதையொட்டிய மதிப்பீட்டு அளவைகளும் (assessment criteria) தெளிவாக இருத்தல் அவசியம். அவற்றை ஆசிரியர்கள் தெளிவாகப் புரிந்துகொண்டு மாணவர்களிடம் தெரிவிக்க வேண்டும்.

மதிப்பீட்டில் ஆசிரியர்கள் ஒன்றுபட்டுச் செயல்பட்டால் மாணவர்களின் கற்றலைப் பற்றி வெவ்வேறு கோணங்களிலிருந்து முழுமையாக அறிய முடியும். இது நற்குணம் மற்றும் குடியியல் கல்வியில் மாணவர்கள் அடைந்துள்ள தேர்ச்சியைப் பற்றி முழுமையாக அறிவிக்க உதவும்.

## படம் 10 : நற்குணம் மற்றும் குடியியல் கல்வியின் மதிப்பீட்டு வகைகள்

### நற்குணம் மற்றும் குடியியல் கல்வியில் மதிப்பீடு

**நோக்கம்: நற்குணம் மற்றும் குடியியல் மேம்பாட்டுக்கான கருத்துத் தெரிவிப்பு**

**அணுகுமுறை: மாணவரை மையமாகக் கொண்டதும் ஒட்டுமொத்த பள்ளி சார்ந்த அணுகுமுறையும்**

### சுய மதிப்பீடு

சுய மதிப்பீடு என்பது மதிப்பீட்டில் ஒரு முக்கியப் பகுதி ஆகும். சுய மதிப்பீட்டின் வழி மாணவர்கள் தங்களுடைய கற்றலைப் பற்றி மீள்நோக்கிப் பார்த்து தங்களுடைய முன்னேற்றத்திற்குத் திட்டமிடுவார்கள்.

**உத்திகள்**:
- மீள்நோக்கம்
- குறிப்பேடு எழுதுதல்

**கருவிகள்**:
- சரிபார்ப்புப் பட்டியல்
- தகுதிநிலை விளக்கக் குறிப்புகள்
- குறிப்பேடுகள்
- நடத்தைக் குறியீடுகள் (Behavioural Indicators)

### சக மாணவர் மதிப்பீடு

சக மாணவர் மதிப்பீடு என்பது மாணவர்கள் மற்ற மாணவர்களுக்குக் கருத்துத் தெரிவிப்பதைக் குறிக்கும். மாணவர்கள் பிறரிடம் கருத்துத் தெரிவிக்கும்போது கூருணர்வுடன் செயற்படவும் பாரபட்சமில்லாத நிலையில் கருத்துத் தெரிவிக்கவும் கற்றுக்கொள்வார்கள். இந்த 21-ஆம் நூற்றாண்டுத் திறன்களையே நாம் மாணவர்களிடையே வளர்க்க விரும்புகிறோம்.

**உத்திகள்**:
- சக மாணவர் கேள்வி கேட்டல்
- சக மாணவர் கண்காணிப்பு
- கூடிக் கற்றல் (co-operative learning)
- கூட்டு முறையில் கற்றல் (collaborative learning)
- வட்டச் செயல் முறைகள் (circle processes)

**கருவிகள்**:
- சரிபார்ப்புப் பட்டியல்
- தகுதிநிலை விளக்கக் குறிப்புகள்
- நடத்தைக் குறியீடுகள்

### ஆசிரியர் மதிப்பீடு

பாடத்தைத் திட்டமிடும் ஆசிரியர்களுக்கே அவர்கள் அடைய விரும்பும் கற்றல் விளைவுகள் என்னவென்று தெளிவாகத் தெரியும். மாணவர்களுடன் அதிக நேரம் செலவிடும் ஆசிரியர்களே இந்தக் கற்றல் விளைவுகளை அடைவதற்கு முறைசார்ந்த கருத்துத் தெரிவிப்பு மூலமும் முறைசாரா கருத்துத் தெரிவிப்பு மூலமும் உதவலாம். மாணவர்களின் கற்றலை அடிப்படையாக அமைந்த கருத்துத் தெரிவிப்பு, மாணவர்கள் தங்களது முன்னேற்றத்தைப் புரிந்துகொள்ளவும் தாங்கள் எதிர்நோக்கும் சவால்களை அடையாளங்காணவும் அவற்றை மேம்படுத்தும் வழிகளை பரிந்துரைக்கவும் உதவும்.

**உத்திகள்**:
- கேள்விகளின் வழித் தெளிவுபடுத்துதல்
- ஆசிரியர் கண்காணிப்பு
- கற்பிக்கத்தக்க தருணங்கள்
- வட்டச் செயல்முறைகள் (circle processes)

**கருவிகள்**:
- சரிபார்ப்புப் பட்டியல்
- தகுதிநிலை விளக்கக் குறிப்புகள்
- நடத்தைக் குறியீடுகள்
- முழுமையான தேர்ச்சி அறிக்கை



RESTRICTED

## References (மேற்கோள் நூல்கள்)

Beal, C., Bolick, C. M., Martorella, .P. H., (2009).Teaching Social Studies in Middle and Secondary Schools. Fifth Edition. United States of America:Pearson Education, Inc.

Bennis, W. G., & Thomas, R. J. (2002). Geeks and geezers: How era, values and defining moments shape leaders. Cambridge, MA: Harvard Business School Press.

Berry, R., (2008). *Assessment for Learning*, Hong Kong University Press, Hong Kong.

Brown, F.B., (1977). *Education for Responsible Citizenship*, Mc Graw Hill Publication, London.

Byron G. Massialas, Rodney F. Allen.(1996)Crucial Issues in Teaching Social studies K-12, Wadsworth Publishing Company.

Cunningham, D.D., (2006). *The Seven Principles of Constructivist Teaching: A Case Study*, Vol. 17, No. 1, ISSN 1091-4071.

*David A. Kolb on Experiential Learning*. Available from http://www.infed.org/biblio/b-explrn.htm. Accessed on 1 July 2012.

Expectations of Excellence Curriculum Standards for Social Studies. (1994). National Council for the Social Studies (NCSS).USA.

Galina D., (2007), Vygotsky in action in the early years, The ‘key to learning’ curriculum, (pp. 9). Routledge, New York.

Garrod, A. et al. (2008). *Adolescent Portraits, Identity, Relationships, and Challenges, 6th Edition*, Pearson, USA.

Gray, A., *Constructivist Teaching and Learning*. Available from http://saskschoolboards.ca/research/instructions/97-07.htm Accessed on 18/07/2012.

Harmin, M., (1988). *Values Clarity, High Morality – Let’s Go for Both*, Educational Leadership.

Henderson, L., (2005). *Combining moral philosophy and moral reasoning: The PAVE moral reasoning strategy*, International Education Journal, 6(2), 184-193, ISSN 1443-1475, Shannon Research Press, Australia.

Kerri-Lee K., Sandra B., Sue D., (2006).Educational Psychology for learning and teaching and Nelson Australia Pty Limited.

Kenneth T. Henson, Ben F. Eller. (1999). Educational Psychology for Effective Teaching: Chapter 11 Motivation, pg 381, Wadsworth Publishing Company.

Kirschenbaum, H., (1977). *Current research in Values Clarification*, in idem, op. Cit.; and Alan Lockwood, *What's Wrong with Values Clarification?*, Social Education, p. 399.

Larson, W. et al. (2002). *Changes in Adolescents' Interpersonal Experiences: Are They Being Prepared for Adult Relationships in the Twenty-First Century?* Journal of Research on Adolescence, 12(1), 31-68, Society for Research on Adolescence.

Levy, M. K. & Kerpelman, J. L. (2010). *Identity Process and Transformative Pedagogy: Teachers as Agents of Identity Formation,* Identity: An International Journal of Theory and Research, Psychology Press.

Louis B. Raths, Merrill Harmin, & Sidney B, Simon, (1966). Values and Teching: Working with Values in the Classroom (Columbus, Ohio: Charles E. Merrill).

Marsh,C., (1998),Teaching Studies of Society and Environment.Second Edition, Australia:Prentice Hall Australia Pty Ltd.

McPhail, P., Ungoed-Thomas, J.R. & Chapman, H. (1972). *Moral Education in the Secondary School*, School Council Publications, USA.

Nucci,L.P., & Narvaez D.(2008), Handbook of Moral and Character Education (2008), pp 352. Routledge, UK.

Ormrod, J.E, (2008). Educational Psychology, Developing Learners, 6th edition. Pearson, New Jersey.

Simon, B.S., Howe, W.L. & Kirschenbaum, H. (1978). *New Revised Edition Values Clarification (A Handbook of Practical Strategies for Teachers and Students,* New York: A&W Publishers, Inc., USA.

Strommen, E. F., & Lincoln, Bruce, (1992). Constructivism, technology and the future of classroom learning. Education & Urban Society. v24, n4, 466-477.

Tan, O.S, R.D. Parsons, S.L Hinson, D. Sardo-Brown (2003). Educational Psychology, A Practitioner-Researcher Approach, An Asian Edition (pp.47). Thomson Learning, California.

T. Lickona (1991). Educating for Character, How schools can teach respect and responsibility, (pp 266). Bantam Books, New York.



RESTRICTED

Vessels, G., (1998), Character and Community Development ( pp.31), Praeger, London.

Wiggins, G., & McTighe J.(2005). Understanding by Design. Alexandria, VA: Association for Supervision and Curriculum Development.

Wiliam, D., (1988). Inside the Black Box: Raising Standards Through Classroom Assessment, King's College London School of Education, London.

Wiliam, D., (2009). *Assessment for Learning: why, what and how? An inaugural professional lecture*, Institute of Education, University of London, London.

Woolfolk A., (1980). Educational Psychology. Tenth Edition.Chapter 2: Cognitive Development and language pg 41 and 73 Person Education Inc., Boston.

## Acknowledgements (நன்றி தெரிவித்தல்)

The Student Development Curriculum Division, Ministry of Education, wishes to acknowledge the contributions of the many teachers, Heads of Departments, lecturers, groups and institutions that participated in the process of the development and refinement of the Character and Citizenship Education Syllabus. We would like to record our special thanks to the following schools:

**Primary Schools**

Anglo-Chinese School Junior
Anglo-Chinese Primary School
Belestier Hill Primary School
Bukit Panjang Primary School
Casuarina Primary School
CHIJ Our Lady Queen of Peace
CHIJ Toa Payoh Primary School
Chongfu Primary School
Compassvale Primary School
Concord Primary School
Corporation Primary School
De La Salle Primary School
Elias Park Primary School
Endeavour Primary School
Geylang Methodist Primary School
Greenridge Primary School
Griffths Primary School
Haig Girls School
Hong Wen School
Innova Primary School
Juying Primary School
Lakeside Primary School
Lianhua Primary School
Kranji Primary School
MacPherson Primary School
Maha Bodhi School
Mayflower Primary School
Meridian Primary School
Monfort Junior School
Nanyang Primary School
New Town Primary School
Radin Mas Primary School
River Valley Primary School
Opera Estate Primary School
Qihua Primary School
Pasir Ris Primary School
St Anthony's Primary School
St Stephen School
Princess Elizabeth Primary School
Poi Ching School
Rulang Primary School
Telok Kurau Primary School
Teck Whye Primary School
Temasek Primary School
Yew Tee Primary School
Zhonghua Primary School

**Secondary Schools**

Ang Mo Kio Secondary School
Assumption English School
Broadrick Secondary School
Bukit Panjang Government High School
Bedok South Secondary School
Bedok View Secondary school
Bowen Secondary School
Chua Chu Kang Secondary School
Commonwealth Secondary School
Chung Cheng High School (Main)
Chung Cheng High School (Yishun)
Dunman Secondary School
East View Secondary School
Evergreen Secondary School
Fajar Secondary School
Fuchun Secondary School
Jurong Secondary School
Juying Secondary School
Junyuan Secondary School
Kuo Chuan Presbyterian Secondary School
Montfort Secondary School
MacPherson Secondary School
Northland Secondary School
Pei Hwa Secondary School
Pioneer Secondary School
Presbyterian High School
Punggol Secondary School
Queentown Secondary School
Serangoon Garden Secondary School
Shuqun Secondary School
St. Andrew’s Secondary School
St Gabriel's Secondary School

Swiss Cottage Secondary School
Springfield Secondary School
Tanjong Katong Secondary School
Tanjong Katong Girl’s School
Unity Secondary School
Woodlands Ring Secondary School
Yishun Town Secondary School
Yuan Ching Secondary School
Yusoff Ishak Secondary School
Zhenghua Secondary School

**Junior Colleges**
Anglo Chinese Junior College
Tampines Junior College

We would also like to thank all who have helped in one way or another in the development of the Character and Citizenship Education Syllabus.

© Copyright 2012. Student Development Curriculum Division

This publication is not for sale. **For Restricted Circulation Only.**

All rights reserved.  No part of this publication may be reproduced without prior permission of the Ministry of Education, Singapore.

Year of Implementation: 2014

ISBN: 978-981-07-5477-8

Ministry of Education
SINGAPORE